விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 31 வியாழக்கிழமை (16.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3503)

யாழ்ப்பாண குடும்பப் பெண்

## கொழும்பில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் சடலம் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பீட்டர்சன் வீதியிலுள்ள அவரது 24☛

## 1 கோடி பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான 20 தங்க பிஸ்கட்டுக்களுடன் இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.


கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய வியாபாரி ஒருவரே 02☛

நான் கட்டியெழுப்பிய நாட்டை

# நல்லாட்சி அரசு அழித்துவிட்டது

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு) தமது ஆட்சிக் காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட நாட்டை தற்போதைய அரசாங்கம் அழித்து விட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (23-ம் பக்.)



## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. 24☛

## யாழ். வன்முறைகளுடன் தொடர்புடைய 50 பேர் கைது

வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பதிவாகும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல்களில் இதுவரையில் 50க்கும் மேற்பட்டவர்கள் கைதாகியுள்ளனர் என வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் 23☛

## வள்ளம் கவிழ்ந்ததில் அலையில் அடித்து செல்லப்பட்ட மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பில் சிக்கி வள்ளம் கவிழ்ந்ததில் அலையில் அடித்துச் செல்லப்பட்ட மீனவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

ஆனைக்கோட்டை சாவற்கட்டை சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான முத்துக்குமார் துரைசிங்கம் (வயது 59) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் 23☛

## வாழ்வாதாரத்துக்கு வழங்கிய பசு விசமிகளால் கொலை

வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

சமுர்த்தி பயனாளி ஒருவரிற்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட நல்லின பசுமாடு ஒன்று விசமிகளால் இறைச்சியாக்கப்பட்ட சம்பவம் வடமராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சியின் கப்பூது. அந்தணத்திடலில் வசிக்கும் சி.சுப்பிரமணியம் என்பவரது 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பசுவே கொல்லப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீட்டில் கட்டப்பட்டிருந்த பசு 24☛

## பதவியை கோர கூட்டு எதிரணிக்கு தகுதியில்லை!


ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து கொண்டு ஒருங்கிணைந்த எதிரணியினருக்கு பிரதான எதிர்க்கட்சி பதவியை கோர தகுதியில்லை என்று சுகாதார அமைச்சரும் 02☛

## இளம் தாயும் 4வயது மகனும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா கூமாங்குளத்தில் சோகம்



19☛

## நாடாளுமன்றில் சுயாதீன செயற்பாடு குறித்து ஆராய்வு

ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவது என்பது மிகவும் ஆழமாக பரிசீலிக்கப்பட வேண்டியதொன்று என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். 02☛

## அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க தீர்மானம்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் காரணமாக பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீட்டை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். 02☛

ஜெனிவாவில் இலங்கை பொறுப்புக்கூற

## புலம்பெயர்ந்தவர்களின் ஒத்துழைப்பு அவசியம்

- பிரித்தானியா

(ஜெனிவா)

ஜெனிவா பொறுப்புக்கூறல்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதனை ஊக்குவிப்பதில், புலம்பெயர் இலங்கையர்கள் தமது வகிபாகத்தை செலுத்த வேண்டும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான அமைச்சர் மார்க் பீல்ட் இதனைத் தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பில் கூறியுள்ள அவர் மனித உரிமை 23☛

## இராணுவத்தினரின் ரக் வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் பலி

கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் மீது இராணுவத்துக்கு சொந்தமான ரக் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற் 23☛

## யாழிலிருந்து நேரடியாக வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ள நடவடிக்கை



யாழ்.இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் நேரடியாக வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்வதற்கும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வான்வழி மற்றும் கடல்வழி சேவையை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கையை இந்தியா ஆரம்பித்துள்ளதாக யாழ். இந்திய 23☛

## சம்பத் நாட்டைவிட்டு வெளியேற கடற்படை பணம் வழங்கியது!

நீதிமன்றில் குற்றப்புலனாய்வு பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை உட்பட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரி நேவி சம்பத், நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் 5 இலட்சம் ரூபாய் பணத்தை வழங்கியுள்ளார். அந்தப் பணம் கடற்படைக்குச் சொந்தமான வங்கிக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## முல்லையில் வாடிகள் தீக்கிரை

# கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களும் விளக்கமறியலில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு-நாயாறு பகுதியில் மீனவர் வாடிகள் சில தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாயாறு பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு 10.30 அளவில் 8 வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டன.

மீன்பிடிப் படகு ஒன்றும் வலைகள் உள்ளிட்ட பொருட்களும் தீக்கிரையாகின.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து. எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர். (ம-281)

## நாடாளுமன்றில்..

நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவது குறித்து தீர்மானிக்கும் வகையிலான விசேட சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவது தொடர்பாக ஜி.எல்.பீரிஸ் தலைமையில் விசேட நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜி.எல்.பீரிஸ், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சுயாதீனமாக செயற்படுவது தொடர்பாக விசேட கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

ஆனால், இந்த விடயத்தில் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக ஆழமாக பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய எமது தலைமையின் கீழ் நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.(ம)

## 1 கோடி பெறுமதியான...

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் சென்னையில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL 126 என்ற விமானத்தில் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபர் அணிந்திருந்த காற்சட்டைபையில் 100 கிராம் நிறையுடைய 20 தங்க பிஸ்கட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## அரசியல் ரீதியாக...

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரசியல் பழிவாங்கல் காரணமாக உயிரிழந்த மற்றும் ஏனைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நஷ்ட ஈட்டை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவற்றுக்கான இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் அமைக்கப்பட்ட குழுவின் சிபாரிசுக்கமையவே நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்கும் இந்த இழப்பீட்டை 2019ஆம் ஆண்டில் செலுத்தி முடிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, அமைச்சர் தலதா அத்துகோரள, அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த ஆவணத்துக்கும் நேற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ம)

## பதவியை கோர கூட்டு...

அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை சுட்டிக் காட்டினார்.மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

ஒருங்கிணைந்த எதிரணியில் உள்ளவர்கள், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன்ணியின் உறுப்பினர்களாகவே இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு ஒரே கட்சியினருக்கு அரசாங்கத்தையும் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் வழங்கிவிட முடியாது. இது சம்பிரதாயப் பூர்வமாகவும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

அவர்களுக்கு, எதிர்க்கட்சி பதவி கிடைத்தே ஆக வேண்டும் என்றால் ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறிய பின்னர், தாராளமாக அதனைக் கோரலாம். அப்போது மட்டுமே அவர்களுக்கு இதற்கான தகுதி ஏற்படும்.

ஆனால், அவர்கள் இதனை ஒருபோதும் செய்ய மாட்டார்கள். முன்னணியிலிருந்து வெளியேறினால் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தஸ்தும் போய்விடும் என்பதால் அவர்கள் ஒரு போதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேற மாட்டார்கள் என்று தெரிவித்தார்.

எனினும், நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கு இணங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே பிரதான எதிர்க்கட்சி எனும் பதவி வழங்கப்பட வேண்டும் என சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த வெள்ளி க்கிழமை இடம் பெற்ற சபை அமர்வின் போது உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இதனை ஏற்றுக்கொள்ளாத மகிந்த ஆதரவு ஒருங்கிணைந்த எதிரணியினர், தொடர்ச்சியாக இந்தப் பதவியை கைப்பற்ற வேண்டும் என அரசாங்கத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்திக்கொண்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


**வாடகைக்கு**

நாவலர் றோட் நல்லூரில் சிறிய குடும்பத்திற்கு உகந்த ஓர் அறை, இணைந்த குளியலறையுடன் கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.

**தொ.பே.இல-0762160099** (5375)

**விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்த வேலை பழக ஆர்வம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.

**சிவகணேசன் ரெக்ஸ்**

பெரியகடை, யாழ்ப்பாணம் (5380)


# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் தேவி



சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் மட்டுவில் சந்திரபுரம் பிலிப் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் தேவி 13.08.2018 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லையா இரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-பூமணியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லம்மாவின் அன்பு மருமகளும், முரளிதரன் (லண்டன்), காயத்திரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், பானுரேகா (லண்டன்), உதயகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், அம்ஷா (லண்டன்), அனுஷ்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (17.08.2018) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Dr.பிலிப் வீதி,**
**மட்டுவில் வடக்கு,**
**சந்திரபுரம், சாவகச்சேரி.** (5378)

**தகவல்:-குடும்பத்தினர்**
**தொ.இல:0777894270**

## கிட்டினன் திருநாவுக்கரசு



சோளங்கன் கரணவாய் மேற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினன் திருநாவுக்கரசு நேற்று (15.08.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கிட்டினன்-வள்ளியம்மை தம்பதியரின் மகனும், சரோசினிதேவியின் பாசமிகு கணவரும், அமரர்களான இராசரட்ணம், சின்னமணி மற்றும் இராசம்மா காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் செல்லக்கண்டு ஆகியோரின் சகோதரரும் பொன்னையா, கணேசு, காலஞ்சென்ற குமார், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் செல்வரத்தினம், வன்னியசிங்கம், ஐயம்பிள்ளை, சுப்பிரமணியம், சிறிஸ்கந்தராசா (லண்டன்), நித்தியானந்தராசா, தயானந்தராசா, ரஞ்சிதபாஸ்கரி, சிவஞானசுந்தரம் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்), ராணிபவா ஆகியோரின் மாமனாரும் தவக்குமார், விஜயா, சிறிகாந் ஆகியோரின் பெரியப்பாவும் புவனேஸ்வரியின் (சுவிஸ்) சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2018) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் பூவரசம்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோளங்கன்**
**கரணவாய் மேற்கு, கரவெட்டி** (சி-3521)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

## நுண்நிதியியல் டிப்ளோமா (பகுதிநேர) கற்கை நெறி
## இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2017


மேற்படி டிப்ளோமா கற்கைநெறிக்கான இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சைகள் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும். பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம். (சி-3519)

| Date | Course Unit No | Subject | Time |
|---|---|---|---|
| 25.08.2018 Saturday | DMF 1231 | Managing Peoples of MFIs | 09:30 am – 12:30 pm |
| 26.08.2018 Sunday | DMF 1232 | Business Statistics. | 09:30 am – 12:30 pm |
| 01.09.2018 Saturday | DMF 1233 | Ethics and Good Governance of MFI | 09:30 am – 12:30 pm |
| 02.09.2018 Sunday | DMF 1234 | Product Development and Operational Risk Management | 09:30 am – 12:30 pm |
| 15.09.2018 Saturday | DMF 1235 | Business Planning | 09:30 am – 12:30 pm |
| 16.09.2018 Sunday | DMF 1236 | Performance Evaluation of MFI | 09:30 am – 12:30 pm |
| 28.09.2018 (Friday) | DMF 1247 | Project Report | Submission Due Date On 28/09/2018 (before 4pm) |

# வடக்கு- கிழக்கிலுள்ள முகாம்களை மூடமாட்டோம்

## இராணுவத் தளபதி மகேஷ் திட்டவட்டம்



(கொழும்பு)

**இலங்கை இராணுவம் வடக்கு- கிழக்கிலுள்ள முகாம்களை மூடாது எனத் தெரிவித்துள்ள இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க எனினும் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவம் நிலை கொண்டுள்ள இடங்களின் எண்ணிக்கையைக் குறைப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.**

வடக்கு-கிழக்கில் நாங்கள் 522 ஏக்கர் நிலங்களை விடுவிக்க தயாராகவுள்ளோம். எனினும் இந்த நிலங்களை உரிமையாளர்களிடம் வழங்குவதற்கு முதல் நாங்கள் எங்களை உரிய விதத்தில் தயார்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எங்களுக்கு உட்கட்டுமான தேவைகள் உள்ளன. இதன் காரணமாக நாங்கள் வேறு இடத்திற்கு செல்வது என்றால் படையினர் தற்காலிகமாக தங்கியிருப்பதற்கான இடங்களை நாங்கள் அமைக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே நான் அரசாங்கத்திடமிருந்து நிதியை கோரியுள்ளேன். எங்களிற்கு 800 மில்லியன் தேவைப்படுகின்றது. இதில் 100 மில்லியன் ஏற்கனவே கிடைத்துள்ளது எனவும் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

எனினும் நாங்கள் கோரியுள்ள முழுமையான நிதியை அரசாங்கம் இன்று தந்தால் கூட படையினரை வேறு இடத்தில் தங்கவைப்பதற்கான கட்டடங்களை அமைப்பதற்கு எனக்கு ஐந்து மாதங்கள் பிடிக்கும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆறு மாதத்திற்குள் நாங்கள் கோரிய நிதி எங்களுக்கு கிடைத்தால் எங்கள் படையினர் வேறு இடத்திற்கு மாற்றப்படுவதை நான் உறுதிசெய்வேன்.

ஜூலை மாத இறுதி வரை இலங்கை இராணுவம் வடக்கு- கிழக்கில் 65 ஆயிரம் ஏக்கர் நிலங்களை விடுவித்துள்ளது. தற்போது படையினர் சுமார் 19 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நிலை கொண்டுள்ளனர். வடபகுதியில் 16 ஆயிரம ஏக்கர் நிலத்தில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

கிழக்கில் 3000 ஏக்கர் நிலத்தில் படையினர் நிலை கொண்டுள்ளனர் என வும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் 2621 ஏக்கர் நிலம் மாத்திரமே தனியாருக்கு சொந்தமானது. ஏனைய நிலங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை எனவும் அவர் தெரிவித்தார்.


பொது மக்களுக்கு சொந்தமான தனியார் நிலங்களை வழங்குவதற்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இவற்றின் காரணமாக தேசிய பாதுகாப்பு எந்த வகையிலும் பாதிக்கப்படாது. படையினரின் பிரசன்னத்தை குறைத்துகொண்டு நிலங்களை விடுவிக்கின்றோம்.

வடக்கில் நாங்கள் நிலை கொண்டுள்ளமைக்கு அங்கு பிரச்சினைகள் காணப்பட்டதே காரணம். யுத்தம் முடிவடைந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் பொலிஸார் விரைவில் அந்த பகுதிகளை பொறுப்பேற்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

## இந்தியாவின் சுதந்திரதினம் கொழும்பில் கோலாகலம்







(கொழும்பு)

இந்தியாவின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.என். என். தரன்ஜித் சிங் சந்து தலைமையில்நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் இலங்கை - இந்தியாவின் வர்த்தக சபையின் உறுப்பினர்கள் இலங்கை வாழ் இந்தியப் பிரஜைகள் மற்றும் வெவ்வேறு துறைசார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் இந்நிகழ்வில் இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டுப்புற கலாசார நடன நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## தமிழர் தாயகத்தில் அமைக்கப்பட்டுள்ள போர்ச் சின்னங்களை அகற்றக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள போர்ச் சின்னங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி சமத்துவத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பினால் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த விடயம்தொடர்பாக சமத்துவத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் இணைப்பாளரால் கடந்த வாரம் கையளிக்கப்பட்ட மகஜரில், இலங்கையில் ஆயுத யுத்தம் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினால் போர் சின்னங்கள் வடக்கு-கிழக்கில் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் பொழுது பாரிய இழப்புக்களை சந்தித்த தமிழ் மக்கள் யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் முடிந்த நிலையிலும் அந்த தாக்கத்தில் இருந்து இதுவரை மீள வர முடியவில்லை.


அதற்கு இராணுவத்தினால் அமைக்கப்பட்ட போர் சின்னமும் ஒரு காரணமாக இருக்கின்றது. போர்ச்சின்னங்களை கடந்து செல்லும் பொழுது தமிழ் மக்கள் மன ரீதியான உளைச்சலுக்கு ஆளாவதுடன் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களை வேதனையுடன் நினைவு கூர வைக்கின்றது.

இலங்கையில் வாழும் மக்களிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கும் நிலையான சமாதானத்தை நோக்கி பயணிப்பதற்கும் போர்ச் சின்னங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரிடம் கொடுக்கப்பட்ட குறித்த மகஜரை, முதலமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைத்துள்ளார். (இ-9)

## காரைநகரில் மினி சூறாவளி எட்டு வீடுகளுக்குச் சேதம்








(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட மினி சூறாவளியால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்ததுடன் 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்து பாரிய பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது.


யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் மாலை திடீரென பலத்த காற்றுடன் கடும் மழை பெய்தது. வழக்கத்திற்கு மாறாக காற்றின் வேகம் மிகவும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் கடும் மழையும் பெய்தது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்த மினி சூறாவளி காற்றுடன் கூடிய மழையினால் காரைநகரில் எட்டு வீடுகள் சேதமாகியுள்ளன. காரைநகர் கல்லந்தாழ்வு ஐந்தாம் வட்டாரப் பகுதியில் ஒரு வீடு முழுமையாக சேதமாகியுள்ளதுடன் நான்கு வீடுகளின் கூரைகள் தூக்கி ஏறியப்பட்டு பகுதியளவில் சேதமாகியுள்ளன. அத்துடன் பொன்னாலை குடியிருப்புப் பகுதியிலுள்ள மூன்று வீடுகள் நேற்று முன்



தினம் வீசிய மினி சூறாவளி காரணமாக சேதமாகியுள்ளதுடன் இப்பகுதியிலுள்ள மரங்களும் கடும் காற்றின் காரணமாக முறிந்து விழுந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதியை பிரதேச செயலர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (இ-9)

# தேறுமா இந்திய ஆரம்ப துடுப்பாட்டம்?






சமீபத்திய டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் ஆரம்ப வீரர்களின் செயற்பாடு மிக மோசமாக உள்ளது. இது இந்திய அணிக்கு பெரும் சிக்கலை கொடுத்துள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் போராட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி, லோர்ட்ஸ் டெஸ்டில் சரணாகதி அடைந்தது. இதனால் தொடரில் 0-2 என பின்தங்கியது.

இதற்கு, அணியின் துடுப்பாட்டம் மோசமாக இருப்பது முக்கிய காரணம் என்றாலும் ஆரம்பம் மிக மோசமாக உள்ளது.

தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடரில் 3 டெஸ்டில் (6 இன்னிங்ஸ்) ஒரு அரைச்சதம் கூட அடிக்காத முரளி விஜய், 'அவுட் சுவிங்' பந்துகளுக்கு எளிதாக விக்கெட்டை பறிகொடுக்கிறார். செஞ்சுரியன் டெஸ்டில் சுழலில் வீழ்ந்த இவர், அடுத்து 'யோர்க்கர்' பந்துகளை எதிர்கொள்ள திணறினார்.

தற்போது இங்கிலாந்து மண்ணில் கர்ரான், அண்டர்சனின் 'இன் சுவிங்' பந்துகளில் விக்கெட்டை இழக்கிறார். தென்னாபிரிக்கா (1, 13, 46, 9, 8, 25 ஓட்.,). இங்கிலாந்து (20, 0, 0) மண்ணில் இவர் களமிறங்கிய இன் 6 , 1 0 னிங்சில் ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை. சராசரி 12.80 ஓட்டங்களாகத்தான் உள்ளது.

தொடர்ந்து ரசிகர்களை ஏமாற்றி வரும் இந்த மூன்று வீரர்களும் தங்கள் தவறுகளை திருத்திக் கொண்டு வரும் போட்டிகளில் சிறப்பாக ஆடுவார்களா பார்ப்போம்.

### தள்ளாடும் தவான்

மற்றொரு ஆரம்ப வீரர் ஷிகர் தவான், தென்னாபிரிக்க (16, 16 ஓட்.,) ஆடுகளங்களில் 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளை எதிர்கொள்ள தள்ளாடிய இவர் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தார்.

இங்கிலாந்தில் (26, 13) விக்கெட்டுகளுக்கு நேராக வீசப்படும் பந்துகளில் 'சிலிப்' பகுதியில் 'பிடி' கொடுத்து வெளியேறுகிறார். சமீபத்தில் களமிறங்கிய 4 இன்னிங்ஸில் இவர் மொத்தம் 71 ஓட்டங்கள்தான் எடுத்தார். இதன் சராசரி 17.75 ஓட்டங்கள்.

### ராகுல் சொதப்பல்

தவான் தான் சொதப்புகிறார் என லோகேஷ் ராகுலை களமிறக்கினால் இவர் அதை விட கூடுதலாக ரசிகர்களை வெறுப்பேற்றுகிறார். 'ஸ்ரம்புகளை' விட்டு விலகிச் செல்லும் பந்துகளை வீணாக அடித்து அவுட்டாவதையே வழக்கமாக வைத்திருக்கிறார். தென்னாபிரிக்கா (10, 4, 0, 16 ஓட்.,). இங்கிலாந்தில் (4, 13, 8, 10) இவர் களமிறங்கிய 8 இன்னிங்சில் 65 ஓட்டங்கள் (சராசரி 8.12) மட்டுமே எடுத்தார்.

## டேவிட் சில்வா குட்-பை



சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக ஸ்பெயின் அணியின் மூத்த வீரரில் ஒருவரான டேவிட் சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் கால்பந்து அணியின் முன்னணி வீரர்களில் ஒருவராக திகழ்ந்தவர் டேவிட் சில்வா. 32 வயதாகும் இவர் மான்செஸ்டர் சிட்டி அணிக்காக விளையாடி வருகிறார். ஸ்பெயின் அணிக்காக 125 போட்டிகளில் விளையாடி 35 கோல்கள் அடித்துள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்ற உலக கிண்ண கால்பந்து தொடரில் ஸ்பெயின் நொக்அவுட் சுற்றோடு வெளி யேறியது.

இதனால் அந்த அணியின் இனியஸ்டா, பிக்காய் ஆகியோர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றனர். இந்நிலையில் டேவிட் சில்வா வும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு ஸ்பெயின் உலக கிண்ண சம்பியனாகியபோது அந்த அணியில் அட்டக்கிங் பிட்பீல்டரான டேவிட் சில்வா இடம்பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெடரர் வெற்றி

சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் 3ஆவது சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினார். பெண்கள் ஒற்றையரில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அமெரிக்காவில், சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஜேர்மனியின் பீற்றர் கோஜோவ்ஸ்கி மோதினர்.

அபாரமாக ஆடிய பெடரர் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றைய போட்டிகளில் கனடாவின் டெனிஸ் ஷலோவ், ஆர்ஜென்ரீனாவின் லியோனாரட் மேயர் போவ வெற்றி பெற்றனர்.

### செரினா ஏமாற்றம்

பெண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா மோதினர். இதில் செரினா 3-6, 6-2, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

மற்றைய 2ஆவது சுற்றுப் போட்டிகளில் ரஷ்யாவின் கஸ்னட்சோவா, பெலாரசின் விக்டோரியா அசரன்கா உள்ளிட்டோர் தோல்வியடைந்து ஏமாற்றினர்.



## மெஸ்சி ஓய்வா?



நான்கு நட்பு கால்பந்து போட்டிகளை புறக்கணித்துள்ள ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்சி, விரைவில் ஓய்வுபெறுவார் எனக் கூறப்படுகிறது.

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சி (வயது- 31). கடந்த 2016ல் சிலி அணிக்கு எதிரான கோபா அமெரிக்க தொடரின் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தோல்வியடைந்தது.

அதனால் ஏற்பட்ட விரக்தியில் ஓய்வை அறிவித்த மெஸ்சி, உலக கிண்ண தொடருக்கான தகுதிச் சுற்றின்போது ஓய்வை திரும்ப பெற்றுக் கொண்டு அணிக்கு திரும்பினார். சமீபத்தில் ரஷ்யாவில் நடந்த உலக கிண்ண தொடரில் ஆர்ஜென்ரீனா அணி 'ரவுண்டு 16' போட்டியுடன் திரும்பியது.

இந்நிலையில் வரும் செப். 7இல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கவுள்ள நட்பு போட்டியில் கவுதமாலா அணியை சந்திக்கும் ஆர்ஜென்ரீனா அணி, செப்11ல் நியூயோர்க் நகரில் நடக்கவுள்ள மற்றொரு நட்பு போட்டியில் கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டிகளுக்கு முன் ஆர்ஜென்ரீனா அணி, இரண்டு நட்பு ரீதியிலான போட்டியில் விளையாட உள்ளது. இதற்கான எதிரணி, நாள் மற்றும் இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இந்த நான்கு போட்டியிலும் மெஸ்சி பங்கேற்கமாட்டார்என உள்ளூர்மீடியாவில் செய்தி வெளியாகி இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் இவர் விரைவில் ஓய்வை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

SINGER®

யாழ் FIESTA

ஓர் அற்புதமான அனுபவம்

ஆகஸ்ட்

17 18 19

காலை 09.30 - இரவு 09.00 வரை

நுழைவு இலவசம்

யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்

(JI-3505)

# இந்தியாவின் 72 ஆவது சுதந்திர தினம் யாழில்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 72 ஆவது சுதந்திர தினம் யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில்' நேற்றுக் காலை கொண்டாடப்பட்டது.

யாழ்.இந்திய தூதரகத்தின் ஏற் பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் சங்கர் பால சந்திரன் தேசியக்கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்தின் சுதந்திரதின உரையினை துணைத்தூதுவர் வாசித்ததுடன் வடக்கில் இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் உரையாற்றினார். அதனை தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில், மதகுருமார்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், அரச உத்தியோகத்தர்கள், உட்பட பலர் கலந்துகொண்டனர்.(இ-9-101)




## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

அருள் கல்வி நிலையத்தின் அதிபர் இரா.அருட்செல்வத்தின் மணிவிழாவும் ATC கல்வி நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும். (இ)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும். எதிர்வரும் 24 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ)

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளதோடு எதிர்வரும் 25 ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், எதிர்வரும் 26ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-9)

## யாழ். முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவால் நடத்தப்படும் "யாழ்.முயற்சியாளர் விற்பனைக்கண்காட்சி எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில் யாழ்.நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளன.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவும் யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சிப்பிரிவு குறித்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த கண்காட்சியை பார்வையிட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு உள்ளூர் உற்பத்தி பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(இ-9)

# நல்லூர் ஆலயச் சூழலில்

## தெய்வீக இசையரங்கு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு இன்று ஆரம்பமாகி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதிவரை மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மங்கள விளக் கேற்றல், தேவாரத்தை தொடர்ந்து தெல்லிப்பழைசிவபூமிஅறக்கட்டளை மற்றும்துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனின் ஆசியுரையுடன் தெய்வீக இசையரங்கு ஆரம்பமாகும்.

மங்கள இசையை நாதஸ்வரம்-பி.எஸ்.பி. சாரங்கன், என்.பவநாத், தவில்-யூ.ஜெயிந்தன், எஸ்.விதுசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். இந்த நிகழ்வில் அடியவர்கள், இசை ரசிகர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

## தெய்வீக சிறப்பு நிகழ்வுகள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சாவகச்சேரி சங்கத்தானை வீதியில் அமைந்துள்ள உலக சைவத் திருச்சபையின் ஏற்பாட்டில் நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று 16ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரையான 24 நாட்கள் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை தெய்வீக சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இன்றைய நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். ராஜா கிறீம் ஹவுஸ் தலைவர் சி.சண்முகானந்தன் கலந்து கொள்வார். (இ)

## க்ந்தபுராண எழுச்சி விழா

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும். "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018" கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்னும் தொனிப்பொருளில் நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் மாலை 6 மணி தொடக்கம் 8.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறவுள்ளதோடு பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பஜனை நிகழ்வுகளும் இடம்பெறும். இந்துசமய இரவு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் நிகழ்வுகளும் கந்தபுராணம் தொடர்பான சிறப்பு சொற்பொழிவுகளும் விசேட கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-9)

## 'உதித்தனன் உலகம் உய்ய' ஆன்மீக சொற்பொழிவு இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் மாலை 4.30 மணியிலிருந்து ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று "உதித்தனன் உலகம் உய்ய" எனும் தலைப்பிலான சொற்பொழிவை ஓய்வு நிலை அதிபர் கவிமணி அன்னைதாசன் வழங்குவார். (இ)

## இராசி பலன்

**மீனம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணத்தின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**மேடம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** செல்வாக்கு மேன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையுடன் தைரியமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** உறவினர்களிடையே இருந்த கருத்து முரண்பாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு; போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி, ரேவதி<br>காலை 9.36 மணிக்கு<br>துலா-சந் | | சூரி.புத.<br>ராகு |
| செவ்.<br>கேது | | | |
| சனி | | குரு | சந்.<br>சுக் |

16.08.2018
ஆடி 31, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 7.15 மணிவரை
சித்திரை முன்னிரவு 9.42 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
நல்லைக் கந்தன் கொடியேற்றம்
சஷ்டி விரதம்
வளவன்

**கடகம்:** உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் நன்மை தரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** எடுத்த முயற்சிகளில் மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, வாக்கு மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

# தீர்மானங்களை நிறைவேற்றாவிட்டாலும் அறிக்கையில் முறையாகப் பதியவேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சிவராசா தெரிவிப்பு

(சாவகச்சேரி)

நகரசபை அமர்வின் போது பேசப்படும் விடயங்கள் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஆகியவற்றை நகரசபையினால் செயற்படுத்த முடியா விட்டாலும் சபையில் பேசும் விடயங்களை அறிக்கையில் முறையாக பதிவு செய்ய வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க. சிவராசா தெரிவித்துள்ளார்.

சபையில் பேசப்படும் விடயங்கள் முரணான வகையில் அறிக்கையில் இடம்பெறுவதனை சுட்டிக்காட்டியே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

அறிக்கையானது சபையில் நடக்கும் விடயங்களுக்கு மாறாக பதியப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது. பேசும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் விட்டாலும் பரவாயில்லை. ஆனால் அறிக்கையானது முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் பொதுமக்களுடைய தேவைகள் சிறிதேனும் நாம் நிறைவேற்ற வேண்டும்.

பல வருடக்கணக்கில் மணல் வீதியாக காணப்படுகின்ற பாதையை நாம் தார் வீதியாக மாற்றாவிட்டாலும் ஒரு கிரவல் வீதியாக ஆவது மாற்றி அபிவிருத்தியை சிறிதேனும் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியானது வட்டார ரீதியாக பங்கிடப்படாமல் நகரசபை உறுப்பினர்களின் தொகைக்கு ஏற்றவாறு பிரிக்க வேண்டும். ஒரு வட்டாரத்தில் இரண்டு, மூன்று உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். இதனால் அபிவிருத்தி என்று வருகின்ற போது ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு அபிவிருத்தியை செய்ய விரும்புவார்கள். இத னால் உறுப்பினர்களி டையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. அதனை விட ஒவ்வொரு உறுப்பினரும் தேர்தல் காலத்தில் மக்களுக்கு ஏதோவொரு வாக்குறுதியை வழங்கியிருப்பார்கள். அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அபிவிருத்திக்கான நிதி வட்டார ரீதியாக பிரிக்கப்படாமல் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்(இ-9-30)


## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டவேலை செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள்தேவை. குடும்பமாக தங்குவதற்கு வசதியுண்டு. சம்பளம் 30,000/-, சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

தொடர்புகளுக்கு :- 077 168 1697, 076 620 5322



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல்

# ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்-13 ஆதன இல-15/1 வீதி-உயரப்புலம் ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு: J/155

எமது இடாப்பில் வட்டாரம் 13, உயரப்புலம் ஒழுங்கை, ஆதன இல.15/1 இல் யு.மரியான் எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளானிறை "மக்கில்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 4 கொண்ட இவ்வாதனம் சென்யூட் மரியான் செபஸ்தியாம்பிள்ளை ஆகிய இவர்களால் அவ்வூர் அவரது மனைவி செபஸ்தியாம்பிள்ளை பெண் மேரி கலிஸ்ரா ஆகிய இவருக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6731ஆம் இலக்க 23.04.2018 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக(மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.அ.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2834ஆம் இலக்க 11.12.2017 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "மக்கில்" நிலப்பரப்பு 4 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்தியாம்பிள்ளை பெண் மேரி கலிஸ்ரா எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

திரு.அ.ஜெயநேசன்,
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச
சபை, மானிப்பாய்.



# பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த பருத்தித்துறையில் விசேட செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதியில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்ட அறிமுக கூட்டம் வடமராட்சி நல்லொமுக்க நிறுவனத்தினால் கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை நகர சபை உப தவிசாளர் மாதினி நெல்சன், செயலாளர் பி.ரமேஸ்வரன், சபை உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

# வரலக்ஷ்மி விரத உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வரலக்ஷ்மி விரத உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நவகலச அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு விசேட தீபாராதனை, அர்ச்சனை வழிபாடுகள் இடம்பெற்று பத்மாசனத்தில் திருவீதியுலா வருதலுடன் நோன்பு நூல் வழங்கப்படும். நோன்பு நூல் பெற விரும்பும் அடியார்கள் தங்கள் விபரங்களை அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆதீன மகாசபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)





# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/8734 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 14 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்:A/Lவங்கியாளர்<br>தொ.இ: G/8761 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி,பா: 37சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:கணக்காளர்<br>தொ.இ: B/8736 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 19 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Dental<br>தொ.இ: G/8763 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:Diploma/ அரசதொழில்<br>தொ.இ: B/8737 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8764 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: 9ஆம் தரம்/ சொந்ததொழில்<br>தொ.இ: B/8740 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8769 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# துணுக்காய் கிராமங்களில் பல்வேறு பிரச்சினைகள்;நேரில் பார்வையிட்டோம்

## பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் பல்வேறுபட்ட தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் காணப்படுவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

துணுக்காய் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் பல்வேறு பட்ட தேவைப்பாடுகள் , பல்வேறுபட்ட பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக, சட்டவிரோத மணல் அகழ்வுகள்,கிரவல் அகழ்வுகள்,காடழிப்புக்கள் போன்ற செயற்பாடுகள் காணப்படுகின்றன.

கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர், முக்கியமான பிரச்சினையாக 700 குடும்பங்களுக்கு வீட்டுத்தேவைகள் காணப்படுகின்றன.

வாழ்வாதார உதவிக்கான கோரிக்கைகள் 400 பேருக்கும் காணப்படுகின்றன. அதைவிட, போக்குவரத்துப் பிரச்சினையாக அக்கராயன் சந்தியிலிருந்து கோட்டைகட்டியகுளம்,அம்பலப்பெருமாள் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து பிரச்சினை காணப்படுகின்றது.

எமது பிரதேசத்திலே நிலவுகின்ற வரட்சியினால் கிணறுகள் வற்றிக் காணப்படுகின்றன.

இவ்வாறான பிரதேசங்களுக்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவினூடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நீர் இன்றிக் காணப்படுகின்ற கிணறுகளை ஆழப்படுத்துகின்ற தேவையுள்ளது.

எனவே ஆழப்படுத்துவற்கான நிதியுதவி எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

எமது முக்கியமான பல வீதிகள் புனரமைப்பிற்காக ஐரோட் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு அவை நீக்கப்பட்டிருக்கின்றன.

இதைவிட கூடுதலான வீதிகளைப்புனரமைப்பதற்கு பொதுமக்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்திலிருந்து மணல் வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. குறிப்பாக, ஐயன்கன்குளம்,புத்துவெட்டுவான் போன்ற பகுதிகளில் இவ்வாறா்ன சம்பவங்கள் இடம்பெறுகின்றன்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் மக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. நாங்களும் நேரில் சென்று பார்வையிட்டிருக் கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# முறையற்ற கழிவு முகாமைத்துவம்; தொற்று நோய் பரவும் அபாயம்



(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையினால் முறையாக கழிவுகள் முகாமைத்துவம் செய்யப்படாமை யால் தொற்று நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையால் அகற்றப்படும் கழிவுகள் செட்டிகுளம், பெரியகட்டு ஆகிய பகுதியில் கொட்டப்படுகின்றது. அகற்றப்படும் கழிவுகள் தரம் பிரிக்கப்படாமையும், வகைப்படுத்தப்படாமையும் ஒரே இடத்தில் வீசப்படுகின்றது. குறிப்பாக அண்மையில் வீசப்பட்ட கழிவுகளில் மருத்துவ கழிவுகள், சிரிஞ், மருந்து கட்டிய துணி வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், சேலன் வெற்றுப் போத்தல்கள், பிரதேச செயலக ஆவணங்கள் என பல பொருட்கள் ஒரே இடத்தில் வீசப்பட்டுள்ளன.

தற்போது அதிகரித்துள்ள காற்று காரணமாகவும், விலங்குகள் மூலமாகவும் அக் கழிவுப்பொருட்கள் அருகில் உள்ள கிராமங்களுக்கு காவிச் செல்லப்படுகின்றன. இதனால் பெரியகட்டு, கணேசபுரம், கன்னாட்டி ஆகிய கிராமங்களில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(2-250)

# சிகை அலங்கார நிலையம் விசமிகளால் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் நகர் பகுதியில் துணுக்காய் வீதியில் மாற்றுத் திறனாளி ஒருவர் நடத்திவந்த சிகை அலங்கார நிலையம் மீது கடந்த 12 ஆம் திகதி இரவு கடை உடைத்து கடைக்குள் நுழைந்த விசமிகள் அங்கு வைக்கப்பட்டிருந்த தொழில் உபகரண பொருட் களை அடித்து நொருக்கியுள்ளார்கள்.

போரின் போது பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளியாக இருந்த வல்லிபுரம் மதிவாணன் என்பவர் நீண்ட காலமாக குறித்த பகுதியில் சிகை அலங்கார நிலையம் ஒன்றை நடத்திவந்துள்ளார் . இந் நிலையில் விசமிகளால் இவரது தொழில் நிலையம் உடைக்கப்பட்டு தொழில் உபகரணங்கள் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கடையின் உரிமையாளரால் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபரின் முறைப்பாட்டை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்கள்.(2-281)

# பயிற்சி நெறிகளுக்கு பதிவுகளை மேற்கொள்க!

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப் பயிற்சி நெறிகளான காகித மலர் உற்பத்தி மற்றும் பொம்மை உற்பத்தி தொடர்பான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 23,24 ஆகிய திகதிகளில் புதுக்குடியிருப்பு விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே இப் பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் ம. பிரதீபன் அறியத்தந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 229 0470, 0712187431, 077 990 3640 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# வாடிகள் எரிக்கப்பட்ட மீனவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி வழங்கல்





(பனிக்கன்குளம்)

நாயாற்றில் தீயில் எரிந்த வாடிகளின் உரிமையாளர்களுக்கு செஞ்சிலுவை சங்கம் அவசர உதவிகளை வழங்கியுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி இரவு நாயாற்று பகுதியில் உள்ள தமிழ் மீனவர்களின் எட்டு வாடிகள் எரிக்கப்பட்டு மற்றும் கடற்றொழில் உபகரணங்கள், பொருட்கள் பெருமளவு எரிந்து நாசமான சம்பவத்தை தொடர்ந்து அவசர நிவாரண உதவியை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு தற்காலிக நிவாரண பொருட்களை வழங்கி வைத்துள்ளார்கள்.(2-281)




# துணுக்காயில் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் உருவாக்கம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து துணுக்காய் பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது

துணுக்காய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் ,பிரதேச செயலக அதிகாரிகள், மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 15 உறுப்பினர்களை கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (2-281)

# நாயாற்றில் தீக்கிரையாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு ரூ.50 இலட்சம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் - நாயாறு பகுதியில் தமிழ் மீனவர்களுக்கு சொந்தமான 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு- நாயாறு பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு தமிழ் மீனவர்களின் வாடிகளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் மூன்று தென்பகுதி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மேலும் இந்த திட்டமிட்ட நாசகார செயலினால் தமிழ் மீனவர்களுக்கு சொந்தமான 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

நாயாறு இறங்குதுறை பகுதியில் அமைந்திருந்த தமிழ் மீனவர்களுக்கு சொந்தமான 8 வாடிகள் விஷமிகளால் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இதனால் வாடிகள் முழுமையாக எரிந்துள்ளதுடன், உத்தேச மதிப்பீட்டின் படி 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் மாலை வரை பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை நாயாறு இறங்குதுறையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 40 இற்கும் மேற்பட்ட படகுகளை வைத்து தென் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோத தொழிலை செய்து வருகின்றார்.

இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக கூறும் நாயாறு பிரதேச மக்கள், குறித்த தென்னிலங்கை மீனவரை நாயாறு இறங்கு துறை பகுதியில் இருந்து அகற்ற வேண்டும் என தாம் பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைத்த நிலையில் அதனை பொலிஸார் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளதாகவும்கூறினர்.(2-315)

# நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட 276 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்புக் குளத்தின் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்படாமை மற்றும் குளத்தின் நீர்மட்டம் குறைந்து காணப்படுதல் போன்ற காரணங்களினால் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டுவந்த 276 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன.


தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் உள்ள இரண்டு நன்னீர்மீன்பிடி சங்கங்களிலும் 276 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையில் இக் குளத்தின் வைப்பிலிட வேண்டிய மீன்குஞ்சுகள் இது வரை வைப்பிலிடப்படாமை மற்றும் வறட்சியினால் குளத்தின் நீர் மட்டம் குறைதல் போன்றவற்றால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிச்சிராபுரம் அன்நூர், நன்னீர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் 179 அங்கத்தவர்களும் ஆறுமுகத்தான் குளம் நன்னீர்மீன்பிடிச் சங்கத்தின் கீழ் 97 அங்கத்தவர்களும் மீன்பிடி தொழில்களில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது 25 வரையான தொழிலாளர்கள் மட்டுமே தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கும் தொழிலுக்குரிய வருமானம் கிடைப்பதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள மீனவ சங்கங்கள், தற்போது குளத்தினுடைய நீர்மட்டம் 4 அடியாகக்காணப்படுவதுடன் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்படாமையும் இவ்வாறு தொழில்கள் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகான விவசாய அமைச்சர் க.சிவநேசனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது குளத்தில் நீர்மட்டம் தற்போது நான்கு அடியாகக் காணப்படுகின்றது. இவ்வாறு வரட்சியினால் நீர்மட்டம் குறைந்து காணப்படுகின்றது. இதைவிட மீனவர்களால் எந்தவிதமான கோரிக்கைகளும் எமக்கு விடப்படவில்லைஎன்றும்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)





முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஆவணி மாதம் 14 ஆம் திகதி இலங்கை வான் படை கிபிர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவிகள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேர் உட்பட 61 பேரினது பன்னிரெண்டாவது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாக மக்களின் கண்ணீருடன் நடைபெற்றது. புதுக்குடியிருப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் செஞ்சோலையில் உயிர்நீத்தவர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் மலர் தூவி இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

### மகளிர் விவகார அமைச்சரினால்

## போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள்



பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனினால் ஆடு, மாடு வளர்ப்பிற்கான உதவித் தொகை மற்றும் கோழி வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியொதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 7 குடும்பங்களுக்கே இவ்வாறு கால்நடை வளர்ப்புக்கான வாழ்வாதார உதவிகளை அண்மையில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் குறித்த பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (2)

## சட்டவிரோத கடற்றொழில்களை கட்டுப்படுத்த களத்தில் கடற்படையினரும் பொலிஸாரும்

### கடற்றொழில் அமைச்சர் உத்தரவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் கடற்படையினரும் பொலிஸாரும் ஈடுபடவேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்ட போது உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கமைய கடந்த 14 ஆம் திகதி நாயாற்று கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் நடத்திய கடல் சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் (வெளிச்சாம் பாச்சி, மற்றும் தடைசெய்யப்பட்ட வலைகள்) ஈடுபட்ட 8 படகுகளும் அதில் இருந்த 27 கடற்றொழிலாளர்களையும் கைதுசெய்துள்ளார்கள்.

இவர்களின் படகுகள் மற்றும் தொழில் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அனைத்தும் கடற்படையினரால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் பிணையில் விடுதலை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த படகுகள் புத்தளம், சிலாபம், திருகோணமலை, முல்லைத்தீவு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்தவை என தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# உரிமைப்போராட்டம் வெல்வதற்கு நாங்கள் ஒன்று திரளவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் வலியுறுத்து

(முல்லைத்தீவு)

**செஞ்சோலை படுகொலை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் இனத்திற்கு நீதி கோருவது மட்டுமல்லாமல் தமிழினத்தை அழித்த நபர்களை நீதிமன்றத்திற்கு முன்னிறுத்தி பொறுப்புக்கூற வைக்க வேண்டும். அதற்காகத் தான் உரிமை போராட்டம் முன் சென்று வெல்வதற்கு நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு பாடுபட வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு நினைவுரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினை உருவாக்குவதில் பல கோணங்களில் அச்சுறுத்தல்கள். மிரட்டல்கள் ஒருசில நாடுகளின் தூதரங்கள் கூட அச்சுறுத்தியுள்ளார்கள். படை புலனாய்வாளர்கள் கூட அச்சுறுத்தியுள்ளார்கள். அனைத்தினையும் தாண்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வளர்ந்துள்ளது.

- எங்கள் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் மாநகரசபையின் எதிர்க் கட்சி தலைவருக்கு அந்தஸ்தை பெற்ற ஒருவராக இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றார்.

அவருக்கு எதிராக உண்மைக்கு முரணான வழக்கு ஒன்று கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூட்டமைப்பு மக்களிடம் சொல்கின்றது தங்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்காக பாடுபடுகின்றார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற கூட்டமைப்பு இந்த வழக்கை யாழில் உள்ள மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யாமல் கொழும்பில் சென்று அந்த வழக்கை தாக்கல் செய்கின்றார்கள் என்றால் நாங்கள் ஏன் என்று கேட்க வேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கொழும்பில் வழக்கு தாக்கல் செய்கின்றார்களாக இருந்தால் அவர்களுடைய மனதில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. தாங்கள் விரும்பிய தீர்ப்பு கொழும்பில் கிடைப்பதற்கான வாய்ப்பு கூடவாக இருக்கும் என்பதற்காகத்தான் கொழும்பில் வழக்கை தாக்கல் செய்தார்கள்.

அவர் தேர்தலில் போட்டியிட்ட மாநகர சபை எல்லைக்குள்ளே அவருக்கு இருப்பிடம் கிடையாது என்று மணிவண்ணனுக்கு எதிராக முன்வைத்துள்ள பொய்யான குற்றச்சாட்டு தமிழரசு கட்சியில் ஒரு மேயராக திருமதி யோகேஸ்வரன் இருந்தார். மாமனிதர் ரவிராஜ். சிவபாலன் இருந்தவர்கள் இவர்கள் எல்லாம் மாநகர சபையின் எல்லைக்குள் வாழ்ந்தவர்களா? திருமதி யோகேஸ்வரன் கொழும்பில் இருந்தவர். ரவிராஜ் கொழும்பில் வாழ்ந்தவர். சிவபாலன் எல்லைக்கு வெளியில் இருந்தவர். இவ்வாறான நிலையில் ஏன் மணிவண்ணனுக்கு எதிராக வழக்கு தொடுத்தார்கள்.

இதன் ஊடாக கூட்டமைப்பு கொடுக்கும் செய்தி என்னவென்றால் தொடர்ந்தும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற அமைப்பில் உறுப்பினர்களாக நீங்கள் இருந்தீர்களாக இருந்தால் நாங்கள் சும்மா விடமாட்டோம். எங்கெங்கே உங்களை முடக்கலாமோ அங்கங்கே தேடிவந்து முடக்குவோம் என்பதுதான் கூட்டமைப்பின் செய்தியாக காணப்படுகின்றது.

இது கூட்டமைப்பு வெறுமென தேர்தல் அரசியலுக்காகவோ அல்லது கட்சி சார்ந்த நலனுக்காகவோ எடுக்கும் முடிவல்ல. இது அரசை காப்பாற்றுவதற்காக.

இந்த அரசின் அடிப்படை கட்டமைப்புக்களை மாற்றி அமைத்து தமிழ் தேசம் அங்கீகரிப்பதற்கு கடுமையாக உழைப்பதற்கு ஒரே ஒரு தரப்பாக இருக்கக்கூடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகளை இலங்கை அரசு முடக்க விரும்புகின்ற பொழுது அந்த வேலையினை கூலிக்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை பயன்படுத்துகின்றார்கள்.

தமிழர்களின் உரிமை போராட்டம் முன்னிற்கு போகக்கூடாது என்பதற்காக அனைத்து தரப்புக்களும் தெளிவாக இருக்கின்றார்கள்.

இந்த செஞ்சோலை படுகொலை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் இனத்திற்கு நீதி கோருவது மட்டுமல்ல சட்டரீதியாக தமிழினத்தை அழித்த நபர்களை நீதிமன்றத்திற்கு




முன்னிறுத்தி பொறுப்புக்கூற வைப்பது மட்டுமல்ல தண்டனை எடுப்பது மட்டுமல்ல அந்த நீதியினை அரசியல் ரீதியாகவும் பெற்று ஆக வேண்டும்.

அரசியல் ரீதியாக பெறுவதன் ஊடாக மட்டும்தான் இவ்வாறான படுகொலைகள் எதிர்காலத்திலும் நடக்காமல் உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும். அதற்காகத்தான் உரிமை போராட்டம் முன்சென்று வெல்வதற்கு நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு பாடுபட வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (2-281)

# கலைத்தரிசனம்

## கலாபூஷணம் கவிஞர் மு.சிங்கராயர் அவர்களுடனான சந்திப்பு

"சிறுகதை, நாடகம், கவிதை, நாட்டுக்கூத்து எனும் பல்வேறு துறைகளிலும் தன் ஆளுமையைப் பதித்தவர் கவிஞர் மு.சிங்கராயர் என்பதை ஈழத்து இலக்கிய உலகம் அறியும். கவிதைத் துறையிலும் மரபு வழி நின்று எழுதுபவர். 1959 ஆம் ஆண்டு இலக்கியத்துறைக்குள் கால் பதித்த இவர் பாசையூரும் நாட்டுக்கூத்தும்,பாசையூரானைப்பாடு, செம்மனத் தான், மடு அன்னை பிள்ளைத்தமிழ், தூதுபோ தென்றலே, கூவிப்பறந்த கோகிலங்கள், வியாகுல அன்னை வெண்பா ஆகிய ஏழு நூல்களைப் படைத்துள்ளார். இவர் நடிகரும் நெறியாளரும்கூட. இவர் நெறியாள்கை செய்த நாடகங்களான எதுவாழ்வு, வாழ்வா சாவா?, கருவாகி அசோகமாலா, கண்ணீர் எட்டாத நிலவு, பொலினா, யார் குற்றவாளி, கணையாளி, பத்துக்கட்டளை ஆகிய நாடகங்கள் பலராலும் பாராட்டப் பெற்றவை. ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் யாழ். பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1938 ஆம் ஆண்டு மாசி மாதம் 24 ஆம் திகதி பிறந்தார். 2010 இல் யாழ். ரத்னா விருதையும் 2016 இல் கலாபூஷண விருதையும் 2018 இல் முதலமைச்சர் விருதையும் பெற்றார்.31 வருடங்கள் ஆசிரியப் பணிபுரிந்த இவர் அமைதியான போக்கும் அன்பான பேச்சும் கற்பனை வளமும் முதிர்ந்த தமிழ் அறிவுங்கொண்டு தற்போது வரை செயற்றிறனுடன் இயங்கிக் கொண்டிருப்பவர். 955/9, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்து வருகின்றார். உடலை வருத்தும் நோயை- முதுமையை வென்று தமிழன் உயிர்ப்பாய் கலை இலக்கிய ஆன்மீகப் பணிக்காய் தன்னை அர்ப்பணித்துள்ள கவிஞர் மு.சிங்கராயர் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது."



**♦ இலக்கியத்துறைக்குள்ளும் நாடகத் துறைக்குள்ளும் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

என்னை எழுத்துத் துறையில் எழுதும்படி தூண்டியவர் மறைந்த யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள். நான் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த 1959, 1960 காலப் பகுதியில்தான் எழுதத் தொடங்கினேன். ஆயர்தான் முதன் முதலாக மடு மாதாவுக்கு ஒரு பாட்டு எழுது என்று பணித்தார். " மடுத்தாயே சரணம்மா" என்ற தலைப்பில் விருத்தப்பாவிலே முதன் முதலாக ஒரு கவிதையை எழுதினேன். அதனை ஆயர் அவர்கள் பாதுகாவலன் பத்திரிகையில் முன் பக்கத்திலே பிரசுரித்து என்னை ஊக்கப்படுத்தினார். அதற்குப் பின்னரே எழுதத் தொடங்கினேன். 2004 இல் மடு அன்னை பிள்ளைத் தமிழ் நூலை ஆயர் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தேன். நான் நாடகத் துறைக்குள்ளும் கால்பதிக்க ஆயர் அவர்கள்தான் காரணம். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவரது பெயர் கொண்டதினத்தில் "விந்தியவீரன்" என்னும் இந்திய நாடகமொன்றினை நெறிப்படுத்தினேன். அதனைப் பார்த்த ஆயர் நீ ஏன் புதிதாக எழுத முடியாது எழுதிப்பார் என்று கூறினார். அதன் பின்னரே எழுதத் தொடங்கினேன். காலனின் காதல், கண்ணீர், அசோகமாலா, பொலினா, யூலியஸ் சீசர், எதுவாழ்வு எனப் பல நாடகங்களை எழுதினேன். அவை சனசமூக நிலையங்களிலும் பாடசாலைகளிலும் மேடையேற்றப்பட்டன. எனது காவலனின் காதலை வானொலி நாடகமாகவும் எழுதினேன். அதனைத் திருவாளர் சண்முகநாதன் (சானா) வானொலியில் தயாரித்து ஒலி பரப்பினார். அது மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

**♦ கிறிஸ்தவ, தமிழ் சிற்றிலக்கியங்கள் பலவற்றை ஆக்கியுள்ளீர்கள். இதற்கான தூண்டுதல் தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

தமிழில் சிற்றிலக்கியங்களுக்கு முக்கிய இடமுண்டு. இந்து மதம் சார்ந்த வகைகளிலும் புராண இதிகாச நாயக்கர்களின் மேலேயுமே சிற்றிலக்கியங்கள் அதிகம் புனையப்பட்டன. கிறிஸ்தவ இலக்கியங்கள் அவ்வாறு வந்தது குறைவு. வயாவிளானைச் சேர்ந்த பிரான்ஸ்சுப்பிள்ளை என்பவர் இயேசுநாதர் பிள்ளைப்பாட்டு ஒன்றை எழுதியுள்ளார். ஆனால் அது இப்போது கிடைக்கப்பெறவில்லை. பேராசிரியர் அருட்திரு மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகங்களில் சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். கிறிஸ்தவ மறை தழுவிய சிற்றிலக்கியங்கள் மிகவும் குறைவு. அதனால்தான் நான் சில இலக்கியங்களையாவது படைக்க வேண்டுமென ஆவல் கொண்டேன்.

அதன் பயனாக மடுமாதாவின் பேரிலே பிள்ளைத் தமிழையும் குழந்தை இயேசுவுக்குத் தூது இலக்கியத்தையும்படைத்தேன். இவை இரண்டிற்கும் அதிக பாராட்டுக்கள் கிடைத்தன.

**♦ தாங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் பற்றிக் கூறுங்கள்?**

இதுவரை எனது ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன. 1972 இல் பாசையூரானைப் பாடு என்னும் கவிதைத் தொகுதியே எனது முதல் நூல். அது அந்தோனியாரைப் பற்றியது. பின்பு தூதுபோ தென்றலே தூது இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்டது. 2000 ஆம் ஆண்டில் வெளிவந்தது. 2001 இல் வியாகுல அன்னை வெண்பா நூலினை வியாகுல மாதாவின் துயரங்களை வெண்பாவின் வடிவத்திலே எழுதினேன். 2003 இல் கூவிப்பறந்த கோகிலங்கள் எனும் நூல் இது பாசையூரில் இருந்த கலைஞர்கள் பற்றிய நூல். அதன் பின்பு 2004 இல் மடு அன்னைப் பிள்ளைத்தமிழ் என்ற நூலையும் 2007 இல் செம்மனத்தாள் நூலையும் 2009 இல் பாசையூரும் நாட்டுக்கூத்தும் என்ற எனது கிராமத்தின் கூத்துவரலாற்றினை நூலாக்கினேன். எனது நூலாக்க முயற்சிகளில் பல அருட்தந்தையர்கள் ஊக்கம் தந்தனர். அருட்தந்தையர்களான நீ. மரியசேவியர் அடிகள், பிலேந்திரன் அடிகள், ஜீவேந்திராப் போல், ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை, அன்ரன் மத்தாயஸ் ஆகியோருடன் எனது கிராமத்தினைச் சேர்ந்த சில அன்பர்கள் ஆகியோர் எனக்கு உறுதுணையாக இருந்தனர்.

**♦ தாங்கள் சிறந்த மரபுக் கவிஞராகவும் சிறந்த சிறுகதை படைப்பாளியாகவும் உள்ளீர்கள்.அதுபற்றி...**

1965 ஆம் ஆண்டு வீரகேசரியில் நப்பாசை என்ற முதல் சிறுகதை வெளிவந்தது. அதற்காக வீரகேசரியிலிருந்து பாராட்டுக் கடிதமும் இருபது ரூபாய் பணப்பரிசும் கிடைக்கப்பெற்றது.

1966 இல் அஸ்தமனம் என்ற கதை தினகரனில் வெளிவந்தது. பாதுகாவலன், ஈழநாடு, சுதந்திரன், மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் தொடர்ந்து எனது சிறுகதைகள் வெளிவந்தன. பாடசாலைக் காலத்தில் எனக்குத் தமிழ் கற்பித்தவர் வித்துவான் க.வேந்தனார். ஒருமுறை வகுப்பில் எல்லோரையும் பாட்டொன்று எழுதுங்கோ என்றார். நான் விலங்கை உடைத்துவிடு என்று சுதந்திரத்தைப் பற்றி ஒரு பாட்டு எழுதினேன். அவர் அதைப் பார்த்திட்டு அருகில் அழைத்து நல்லா இருக்குது தொடர்ந்து எழுது. ஆனா இப்படி சுதந்திரம், விடுதலை, விலங்கை உடை என்று எழுதினா பிடிச்சுக்கொண்டு போடுவாங்கள் கவனம் என்று சொல்லிச் சிரிச்சார். வித்துவான் ச.சி.ஞானப்பிரகாசம், பண்டிதர் செ. செல்வரத்தினம் ஆகிய மூவரும் எனது ஆற்றலைக் கண்டு பிடித்து என்னை வளர்த்து விட்டவர்கள். எனக்கு புதுக்கவிதைகளில் பிடிப்பில்லை. மரபுக் கவிதை தான் எழுதினனான். புதுக்கவிதை எழுத முயற்சி செய்யவும் இல்லை. நான் ஆசிரியர் பணியினை மலையகம், குருநாகல், புத்தளம், பதுளை, நிகவெருட்டி ஆகிய இடங்களில் ஆற்றினேன். மாலை வேளைகளில் இல்லத்தில் கவிதை, சிறுகதை போன்றவற்றை எழுத போதிய நேரம் கிடைத்தன. அதனால் பல கவிதை களையும் சிறுகதைகளையும் எழுதினேன்.

**♦ தாங்கள் எழுதி நெறியாள்கை செய்த நாடகங்கள் பற்றி...?**

எதுவாழ்வு- 1961, வாழ்வா சாவா? 1962, கருவாகி- 1965, அசோகமாலா- 1969, கண்ணீர்- 1968, எட்டாதநிலவு- 1970, பொலினா- 1972, யார் குற்றவாளி- 1974, கணையாழி- 1976, பத்துக்கட்டளை- 1978 ஆகிய பல நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளேன்.

**♦ நீங்கள் நாட்டுக் கூத்திலும் அதிக ஈடுபாடு உடையவராக இருக்கின்றீர்கள். இதுபற்றி...?**

நாட்டுக் கூத்துக்களில் நான் ஆரம்ப காலங்களில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பிற்பட்ட காலத்தில் அது பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வு எனக்கு மேலோங்கிய போதுதான் பாசையூர் நாட்டுக் கூத்து வளர்ச்சிக் கழகத்தினை உருவாக்கினேன். அதற்கூடாக முதன் முதலில் புலவர் மிக்கோறசிங்கம் எழுதிய கண்டி அரசன் கூத்து நூலைப் பதிப்பித்து வெளியிட்டதுடன் அண்ணாவியார் பாவலுப்பிள்ளை அவர்களை கொண்டு அதனை மேடையேற்றினோம். பின்பு பல அண்ணாவிமார்களுக்கு நானும் ஊக்கம் வழங்கினேன். நாட்டுக் கூத்தில் என்ர அம்மாதான் எனக்குக் குரு. அவர் எந்தநேரமும் கூத்துப்பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார். நான் போய் என்னம்மா எப்பவும் இதையே பாடிக்கொண்டு இருக்கிறியள் என்று கேட்பேன். அப்போது எனக்கு அதன் பெறுமதியை உணரும் வயதல்ல. பின்னர்தான் நாட்டுக் கூத்தின்ர பெறுமதி விளங்கிச்சு. அம்மாவின்ர பெட்டிக்குள்ள நாட்டுக் கூத்துப் புத்தகங்கள்தான் நிறைஞ்சிருக்கும். என்ர சித்தப்பாவும் ஒரு கூத்துக்கலைஞர்தான். அண்ணாவிமார்களான தயோ இராசேந்திரம், மடுத்தீஸ் பாவுலுப்பிள்ளை, சின்னத்தம்பி அந்தோனி ஆகிய மூவரும் தான் என்னை நாட்டுக் கூத்துக்குள் உள்வாங்க வைத்தனர். இவையள் நாட்டுக் கூத்து பழக்கும் போது நான் போய் பார்த்துக் கொண்டு நிற்பேன். அதில் ஏற்பட்ட பிடிப்பு கூடுதலா வரத்தொடங்க நானும் நடிக்கிறது, அதைப் படிக்கிறதோட அதில இருக்கிற நுணுக்கங்களைக் கேட்டுக்கேட்டு தெரிந்து கொண்டன். எனது கூவிப் பறந்த கோகிலங்கள் புத்தக வெளியீட்டுக்கு வந்த கலாநிதி. குழந்தை. ம. சண்முகலிங்கம் ஏன் கூத்துப் பக்கம் வரல்ல என்று கேட்டார். கட்டாயம் செய்ய வேணுமெண்டும் சொன்னார். அதற்குப்பிறகு எழுதிய புத்தகம் தான் செம்மனத்தான் என்ற நாட்டுக் கூத்து.

**♦ தாங்கள் உயிராயுதம் என்ற காவியத்தை கையெழுத்துப் பிரதியாக எழுதியுள்ளீர்கள். அதனை வெளியிடுவதற்கான முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லையா?**

கனடாவில் இருக்கும் நண்பர் ஒருவர் கேட்டதால் போர்வாள் என்ற இசை நாடகத்தை தற்பொழுது எழுதிக் கொண்டிருக்கின்றேன். அதற்கு முதல்ல உயிராயுதம் என்ற பேரில் கடைசியா நடந்த எங்கட இனப் போரைப் பற்றிய ஒரு காவியம் எழுதி முடித்திருக்கிறன். சில சிக்கலால வெளி வரமுடியாமல் இருக்குது. அதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றேன். இக்காவியம் வெளிவரவேணும் என்பதுதான் என்ர கடைசி ஆசை. இக்காவியத்தை அச்சில் பார்க்க முடியாதா என்ற ஆதங்கம் இப்பவும் எனக்குள் இருக்குது.

**♦ தங்களின் சிறுகதை, கட்டுரை, நாடகம், ஆகியவற்றை விட தங்களின் மரபுக் கவிதைகள் அதிகம் பேசப்படுகின்றன. இத்தகைய ஆற்றல் எவ்வாறு தங்களுக்கு உதயமாகியது?**

சிறிய வயதில் இருந்தே எனக்கு மரபுக் கவிதைகளில் நாட்டம் இருந்தது. வித்துவான் வேந்தனார், வித்துவான் ச.சி. ஞானப்பிரகாசம், பண்டிதர் செ. செல்வரத்தினம் இவர்களிடமிருந்துதான் தமிழ் இலக்கணத்தினையும் யாப்புப் பிறழாது எழுதும் கலையையும் கற்றுக் கொண்டேன். எடுத்துக் காட்டாக மரபுக்கவிதைகளில் வெண்பா என்பது புலி வேட்டைக்குச்சமன் என்று கூறுவார்கள். அதில் எழுதுவது சரியான சிரமம். பெரிய எழுத்தாளர்கள் முதலாக பலர் சிரமப்பட்டுள்ளார்கள். ஆனால் எனக்கு அது மிகவும் வாலாயமாக இருந்தது. அதனால்தான் 385 பாக்களால் ஆன வியாகுல அன்னை வெண்பாவை என்னால் ஆக்கக் கூடியதாக இருந்தது. மரபு இலக்கியங்களைப் படைப்பதற்குத் தமிழ் இலக்கணங்களைக்கற்க வேண்டும். இன்று இந்த இலக்கண அறிவு மிகவும் குறைந்து வருவதும் வேதனைக்குரியது.

**♦ இறுதியாக நீங்கள் இந்த கலை இலக்கியத் துறைக்கு மனந்திறந்து கூறுவது?**

கவிதை எழுதுகின்றவர்கள் இலக்கண, இலக்கியங்களைப் படிக்க வேண்டும். இலக்கிய வளம் மிகுந்துள்ள எந்தமிழ் மொழியிலே ஏற்றமும் எழிலுங் கொண்ட சிற்றிலக்கியச் செல்வங்கள் சங்ககாலத்திலே முளைவிட்டு கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் தழைத்து வளர்ச்சியுற்றன. தித்திக்கும் சிற்றிலக்கியங்களாலும் தமிழ் உலகின் எத்திக்கும் புகழ்ந்து பேசப்படுகின்றன. தமிழிலுள்ள தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களிலும் சிலேடை, மடக்கு என்ற சொல்லணிகளும் உவமை, உருவகமென்ற பொருளணிகளும் நிறைந்து காணப்படுகின்றன. உலா, சதகம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், பரணி, தூது, ஆற்றுப்படை என்பன இன்றும் வழக்கிலுள்ள சிற்றிலக்கியங்களாக மிளிர்கின்றன. நாட்டுக் கூத்தில் விருத்தப்பா, அகவற்பா, வெண்பா, ஒச்சணம், உலா, காதல், இன்னிசை என்று எத்தனையோ உருப்படிகள் இருக்கின்றன. இவையெல்லாம் இலக்கண வரம்புக்குட்பட்டவை. அப்பிடி இருந்தபடியால் தான் நாட்டுக்கூத்து இவ்வளவு காலமும் நின்று நிலைக்குது. இப்ப எழுதுகிறவர்கள் இலக்கணத்தைக் கொஞ்சமாவது படிச்சுக் கொள்ள வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# வெளிவிவகார அமைச்சு மக்களை ஏமாற்றுகிறது

## குணதாச குற்றச்சாட்டு



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சு மக்களை ஏமாற்றும் வகையிலான அறிக்கைகளையே தொடர்ந்தும் வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் தலைவர் குணதாச அமரசேகர இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

'முன்னாள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் பொறுப்பு இலங்கைக்கே உரியது.

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த விவகாரத்தை கையாளவில்லை என வெளிவிவகார அமைச்சு கூறியிருப்பது நாட்டு மக்களை ஏமாற்றும் செயலாகும்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இலங்கையில் பணியாற்றிய பிரித்தானிய தூதரக, பாதுகாப்பு துறை அதிகாரியினால் அனுப்பப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக பிரித்தானிய பிரபுக்கள் சபையில் நெஸ்பி பிரபுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும், ஐ.நா.சபை மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியுள்ள சந்தர்ப்பத்தையும் இலங்கை அரசாங்கம் சாதகமான முறையில் பயன்படுத்த வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார். (இ)

# பேச்சுப் போட்டியில் பதக்கம் பெறுவோர் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் "நல்லைக் குமரன்" மலர் வெளியிடுவது வழமை. சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் இக் காலத்தின் தேவை கருதி யாழ். மாவட்ட மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியினை 10.08.2018 அன்று நடத்தி வெற்றி பெற்ற 3 பிரிவுகளிலும் முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்களும் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு 21.08.2018 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மலர் வெளியீட்டுடன் நடைபெறவுள்ளது.

எனவே வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றிய அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொண்டு வெற்றிப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழு கேட்டுக்கொள்கின்றது என யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

### பதக்கங்களை வென்றோர் விபரங்கள்

| மாணவர் பெயர் | பிரிவு | பாடசாலையின் பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| ஜீ.ஓம்ஷியாம்சங்கர் | கீழ்ப்பிரிவு | யா/ புனித பரியோவான் கல்லூரி | 01 ஆம் இடம் |
| கோ.தர்சனா | கீழ்ப்பிரிவு | யா/ யாழ்ற்ரன் கல்லூரி | 02 ஆம் இடம் |
| ஜெ.சுவேதினி | கீழ்ப்பிரிவு | யா/ ஸ்கந்தவரோதய கல்லூரி | 03 ஆம் இடம் |
| அ.அபிநாத் | மத்திய பிரிவு | யா/ இந்துக் கல்லூரி | 01 ஆம் இடம் |
| அ.மேனகா | மத்திய பிரிவு | யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 02 ஆம் இடம் |
| கு.மோகிதன் | மத்திய பிரிவு | யா/ மத்திய கல்லூரி | 03 ஆம் இடம் |
| கா.மதுரா | மேல் பிரிவு | யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 01 ஆம் இடம் |
| ச.ஜானகி | மேல் பிரிவு | யா/ யாழ்ற்ரன் கல்லூரி | 02 ஆம் இடம் |
| ஜெ.கிஷோக் | மேல் பிரிவு | யா/ இந்துக் கல்லூரி | 03ஆம் இடம் |

# புன்னைக்குடாவில் ஆர்ட்லறி படைத்தளம் நிலை கொள்ள அனுமதிக்க முடியாது-ஹக்கீம்

(ஏறாவூர்)


ஏறாவூர்- புன்னைக்குடா கடற்கரையோர பிரதேசத்தில் இராணுவ ஆர்ட்லறி படைப் பிரிவின் படைத்தளம் நிலை கொள்ள அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் காணி விவகாரம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'சுமார் 8 சதுர கிலோமீற்றர் எனும் மிகக் குறுகிய நிலப் பரப்பளவில் சுமார் 53 ஆயிரம் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த பகுதியில் காணிப்பற்றாக்குறை என்பது விஸ்வரூபம் எடுக்கும் ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இதேவேளை, அநேக அரச முகவர்கள் தங்களை இப்பிரதேசத்தில் நிலைப்படுத்தி கொள்வதற்காக இப்பிரதேசத்திலுள்ள காணிகள் மீது அவதானம் செலுத்தி வருகின்றார்கள்.

இலங்கை இராணுவமாக இருக்கும் அதில் ஒரு தரப்பு, தங்களது ஆர்ட்டிலறி படைப் பிரிவை புன்னைக்குடா கடற்கரையோரத்துடன், அண்டிய பகுதிகளிலுள்ள எல்.ஆர்.சிக்கு (Land Reforms Commission) உரித்



தான காணிகளை கைப்பற்றி அங்கே நிலை கொள்ள விரும்புகிறார்கள்.

அதேவேளை, புன்னைக்குடா கடற்கரையோரமெங்கும் பரந்து கிடக்கும் அக்காணிகள், காணி நிர்ணய ஆணைக் குழுவுக்குச் சொந்தமானவை. அக்காணிகள் ஏற்கனவே வர்த்தக முதலீட்டுச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டும் உள்ளன.

படையினர் தங்களது ஆர்ட்லறிப் பிரிவை நிலை நிறுத்திக் கொண்டு தளம் அமைப்பதற்கு கடற்கரையோரங்களைத் தவிர்த்து உட்பிரதேசங்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.

ஏறாவூர்ப்பற்று பதுளை வீதியை அண்டிய பிரதேசங்களிலே போதியளவு அரச காணிகள் உள்ளன. அவற்றில் தங்களுக்குத் தேவையான இடத்தில் படையினர் தங்களது தளத்தை அமைத்து நிலை கொள்ள முடியும்.

இது ஒரு உலகின் ரம்மியமான கடற்காட்சிப் பிரதேசங்களில் ஒன்று என்பதால் சிலவேளை படையினர் எந்நேரமும் கடற்பிரதேசத்தை நோட்டமிடுவதற்கு இப்பிரதேசத்தை தோதான சௌகரியமான இடமாகத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே பிரதேச படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். கிழக்கு மாகாண ஆளுநருக்கும் நன்கறிந்த இந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே, பிரதமரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது' என தெரிவித்துள்ளார். (இ)

# பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் இராணுவத்தினருக்கு வழங்கப்படாது

## நளீன் பண்டார உறுதி



(கொழும்பு)

பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் இராணுவத்தினருக்கு வழங்கப்படாது என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரங்களை இராணுவத்தினருக்கு வழங்கி, நாட்டில் இராணுவ ஆட்சியினை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.

இந்நிலையில் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போதே பிரதியமைச்சர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ பொலிஸ் அதிகாரங்கள் முப்படையினருக்கு வழங்கப்படவுள்ளதாக கூறுகிறார்.

இந்தக் கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது. ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமன்றி இராணுவ அதிகாரங்களையும் முறைகேடாக பயன்படுத்தினர்.

எனினும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கமே பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அறநெறி மாணவர்களின் பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் கடந்த 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் இன்று வியாழக்கிழமை மாலை இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் அறநெறி பாடசாலைமாணவர்களின்பஜனை இடம் பெறுவதோடு "கண்ணப்ப நாயனார்" எனும் தலைப்பில் வில்லுப் பாட்டும் இடம்பெறும்.

தொடர்ந்து ஓய்வு நிலை ஆசிரியரும் சைவப் புலவருமான செ.பாலச்சந்திரன் "சொல்லுவது அறியேன்" எனும் தலைப்பில் சொற்பொழி வாற்றுவார்.

நாளை வெள்ளிக்கிழமை பகல் செல்வச்சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களின் பஜனை இடம்பெறும். பக்திப் பாடலை முகுந்தன் ஆதித்தியன் வழங்குவார். தொடர்ந்து தும்பளை நெல்லண்டை அம்மன் அறநெறி பாடசாலை மாணவியின் "முருகனின் பெருமை பேசுவோம்" எனும் தலைப்பில் மேடைப் பேச்சும் இடம்பெறுவதோடு, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை பிரதி அதிபரும் விரிவுரையாளருமான ச.லலீசன் "ஆற்றங்கரையான் அருள்" எனும் தலைப்பில் பிரசங்கம் நடத்துவார்.

நாளை மறுதினம் மாலை தமிழ் நாட்டைச் சேர்ந்த அருள்நிதி நா.யாகவர்ணன் பெரியாழ்வார் இராமனுச தாசர் செல்வச்சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களுடன் இணைந்து வழங்கும் "காந்தக் கந்தன்" எனும் தலைப்பில் சங்கீத உபன்யாசமும் "சிவராத்திரி" எனும் தலைப்பில் நெல்லண்டை ஜெ.ஜெயகிருஷ்ணாவின் மேடைப் பேச்சும் இடம்பெறும். (இ)

# இலங்கை-சிங்கப்பூர் உடன்படிக்கைக்கான வர்த்தமானி திருட்டுத்தனமாக வெளியீடு

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கை - சிங்கப்பூர் வர்த்தக உடன்படிக்கைக்கு அமைவாக சுமார் 4000 வகையான பொருட்களுக்கு சுங்க வரி நீக்கப்பட்டு திருட்டுத்தனமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

ஒவ்வொரு ஆண்டினதும் அரைவாசியில் அரச நிதி நிலைமை சம்பந்தமாக அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும், இந்த உடன்படிக்கைப்படி சுங்க வகைப்படுத்தப்பட்ட 3539 பொருட்களுக்கு வரி நீக்கப்பட்டுள்ளமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் உரிய பாராளுமன்ற வாசிகசாலை மற்றும் உரிய தரப்பினரிடம் கேட்கப்பட்ட போதிலும் இதுவரை கூட்டு எதிர்க்கட்சிக்கு கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.


இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்க்கட்சித் தலைவருக்கும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருக்கும் கிடைக்க வேண்டும் என்று கூறிய அவர், இந்த வர்த்தமானி அறிவித்தல் கிடைத்தால் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய போராட்டம் வெடிக்கும் எனவும் பந்துல எச்சரித்தார். (இ)

## பாரதம்

### கறுப்புப் பணம் வைத்திருக்கும்

# ஊழல்வாதிகளுக்கு மன்னிப்பே கிடையாது

## பிரதமர் மோடி உறுதி



(டில்லி)

ஊழல்வாதிகளுக்கும் கறுப்பு பணம் வைத்திருப்போருக்கும் மன்னிப்பே கிடையாது என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 72 ஆவது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு நேற்று டில்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக்கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். அப்போது, மத்திய பா.ஜ.க. அரசின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் வளர்ச்சி குறித்து உரையாற்றினார். அவரது உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

ஊழல்வாதிகளுக்கும் கறுப்புப் பணம் வைத்திருப்போருக்கும் மன்னிப்பே கிடையாது. அவர்கள் நாட்டை நாசமாக்கி உள்ளனர். ஊழல்வாதிகள் மற்றும் கறுப்பு பணம் வைத்திருப்போரை தண்டிப்பதில் அரசு உறுதியாக உள்ளது. அரசு உதவியை சட்டப்புறம்பாக பெற்று வந்த 6 கோடி பேர் கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளனர். நலத்திட்ட உதவிக்கான ரூ.90 ஆயிரம் கோடி மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

REFORM, PERFORM, TRANSFORM (சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம்) இதுவே மத்திய அரசின் தாரக மந்திரம். நேர்மையாக வரி செலுத்துவோரால் தான் நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவர்களின் வரிப்பணம் மக்கள் நலனுக்கே செலவிடப்படும். வாரிசு அரசியலை மத்திய அரசு ஒழித்துள்ளது. வரி செலுத்தும் ஒவ்வொருவரும் ஏழைக் குடும்பங்கள் வயிறார சாப்பிட உதவுகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பெண்களின் உரிமையை காப்பதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெண்களை எப்படி மதிக்க வேண்டும் என குழந்தைகளுக்கு பெற்றோர் கற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இத்தாலியில் நெடுஞ்சாலை மேம்பாலம் இடிந்த விபத்தில் பல வாகனங்கள் சேதம்



(ரோம்)

இத்தாலி நாட்டின் ஜெனோவா நகரில் விரைவு நெடுஞ்சாலை மேம்பாலம் இடிந்து விழுந்த விபத்தில் பாலத்தின் அடியில் சிக்கி ஏராளமான வாகனங்கள் சேதமடைந்தன.

இத்தாலி நாட்டின் வடமேற்கில் மலைகள் சூழ்ந்த பகுதியில் ஜெனோவா நகரம் அமைந்துள்ளது. மலைகளுக்கு இடையில் கொங்கிறீட் தூண்களை அமைத்து அவற்றின் மீது உருவாக்கப்பட்டுள்ள வீதிகள் வழியாகதான் இங்கு வாகன போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இடையில் சில வாய்க்கால் மற்றும் கால்வாய் பாலங்களும் உள்ளன.

இந்நிலையில் ஜெனோவா நகரின் மேற்கில் பிரபல தொழிற்பேட்டை அருகே அமைந்துள்ள ஏ-10 நெடுஞ்சாலையில் இருக்கும் மோராண்டி என்னும் மேம்பாலத்தின் ஒருபகுதி நேற்று முன் தினம் திடீரென்று இடிந்து விழுந்தது.

அந்த பாலத்தின் சுமார் 200 மீற்றர் நீளத்திலான பகுதி சுமார் 100 அடி ஆழத்தில் நொருங்கி விழுந்ததால் அவ்வழியாக சென்ற பல கார்களும் லொறிகளும் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியுள்ளன. அவற்றை மீட்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிர்ச் சேதம் ஏற்பட்டதற்கான அதிகாரபூர்வமான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (இ)

# நான் காங்கிரஸ் கட்சியை திருமணம் செய்துள்ளேன்

## ராகுல் காந்தி அறிவிப்பு



(ஐதராபாத்)

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியிடம் திருமணம் குறித்து கேட்டதற்கு, காங்கிரஸ் கட்சியை திருமணம் செய்து கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

ஐதராபாத்தில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ராகுல், பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார். பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து விட்டதாக தெரிவித்தார்.

ஆனால், இது குறித்து பிரதமர் மோடி, ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனம் காத்து வருவதாக வும், அவர் குற்றஞ்சாட்டினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ராகுல், திருமணம் குறித்த கேள்விக்கு காங்கிரஸ் கட்சியையே தாம் திருமணம் செய்து கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் 2019 பொதுத்தேர்தலில் மோடி அரசை வீழ்த்துவதற்கே தான் முன்னுரிமை கொடுப்பதாகவும், பா.ஜ.கவை வீழ்த்துவதற்கு மெகா கூட்டணியை உருவாக்குவது தொடர்பாக பல்வேறு கட்சிகளுடன் பேசி வருவதாகவும் ராகுல் தெரிவித்தார். (இ)

# ஆளுநர் தேர்தலில் 14 வயதுச் சிறுவன்



(நியூயோர்க்)

அமெரிக்காவில் தேர்தலில் போட்டியிட வயது வரம்பு தளர்த்தப்பட்ட நிலையில், வெர்மோண்ட் மாகாண ஆளுநர் தேர்தலில் 14 வயது பாடசாலை சிறுவன் போட்டியிடுகிறான்.

அமெரிக்காவின் வெர்மோண்ட் மாகாணத்தை சேர்ந்த 14 வயது சிறுவன் எதான் சோனே பார்ன். பாடசாலையில் படித்து வருகிறான். கூடைப்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உடையவன்.

வெர்மோண்ட் மாகாண ஆளுநர் தேர்தல் நடைபெற உள்ளது. அதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடுகிறான். ஆளுநர் தேர்தலில் சிறுவன் போட்டியிடுவது அனைவருக்கும் ஆச்சரியம் அளிக்கலாம்.

ஆனால் வெர்மோண்ட் மாகாண மக்கள் இதை சகஜமாக எடுத்துக் கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான சட்ட திட்டங்கள் திருத்தப்பட்டன. அதன்படி இங்கு போட்டியிட வயது வரம்பு தேவையில்லை. வெர்மோண்ட் மாகாணத்தில் 4 ஆண்டுகள் குடியிருந்தால் மட்டும் போதும்.

தேர்தலில் போட்டியிடும் எதான் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறான். இணையத்தளம் மூலம் பிரசாரம் மேற்கொண்டு வருகிறான்.

சுகாதார மேம்பாட்டு சீரமைப்பு, பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சி உள்ளிட்ட திட்டங்களை செயற்படுத்துவதாக உறுதியளித்து இருக்கிறான்.

இவனை எதிர்த்து கிறிஸ்டினே ஹாஸ்குவஸ் என்ற திருநங்கை போட்டியிடுகிறார்.

மூத்த கடற்படை வீரர் ஜேம்ஸ் ஹெலர்ஸ் மற்றும் பிரன்டா சீகல் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (இ)

# சிறுத்தையை விறகு கட்டையால் விரட்டிய முத்துமாரிக்கு கல்பனா சாவ்லா விருது



(சென்னை)

மகளை இழுத்துச்சென்ற சிறுத்தையை விறகு கட்டையால் விரட்டியடித்த கோவை முத்துமாரிக்கு சுதந்திர தின விழாவில் கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை கோட்டை கொத்தளத்தில் நேற்று தேசியக்கொடி ஏற்றி உரையாற்றிய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, தமிழக அரசின் நல் ஆளுமை விருதுகளை வழங்கினார். இதில், தமிழக அரசின் துணிவு மற்றும் சாகச செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது, கோவையில் வசித்து வரும் முத்துமாரிக்கு வழங்கப்பட்டது. விறகு கட்டையால் சிறுத்தையை தனி ஆளாக விரட்டிய இவரது துணிவைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தை சேர்ந்த அய்யப்பராஜ் மனைவி முத்துமாரி (வயது-42).

இவர், குடும்பத்துடன் கோவை மாவட்டம் வால்பாறை பெரிய கல்லார் எஸ்டேட்டில் தங்கியிருந்து அந்த பகுதியில் உள்ள தேயில்ல தோட்டத்தில் வேலை பார்த்து வருகிறார்.

சம்பவ தினத்தன்று முத்துமாரியும், அவரது மகள் சத்யாவும் வீட்டின் பின்புறம் இருந்த விறகுகளை எடுத்து வீட்டுக்குள் அடுக்கி வைத்து கொண்டிருந்தனர். அப்போது பற்றைக்குள்ளிருந்து ஓடி வந்த சிறுத்தை கண்ணிமைக்கும் நேரத்தில் சத்யாவின் கழுத்தை கடித்து இழுத்துச் சென்றது.

இதனை பார்த்த முத்துமாரி பயப்படாமல் விறகு கட்டையை எடுத்து சிறுத்தையை பலமாக தாக்கி விரட்டியடித்துள்ளார்.

இந்த துணிச்சல் பலரது பாராட்டையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வெளிநாடு

## ட்ரம்பின் இரகசிய உரையாடல் வெளியீடு

### அமெரிக்காவில் பரபரப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் தொலைபேசி உரையாடல் பதிவு ஒன்றை அவரது முன்னாள் உதவியாளர் ஒமரோசா மனிகால்ட் நியூமேன் என்ற பெண் இரகசியமாக பதிவு செய்து வெளியிட்டுள்ளார்.

இந்த தொலைபேசி உரையாடல், அமெரிக்காவில் என்.பி.சி. தொலைக் காட்சியில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்த உரையாடல் பதிவில் அவரும் ஜனாதிபதி ட்ரம்பும் உரையாடுவதாக அமைந்துள்ளது.

அந்த உரையாடலில் ஜனாதிபதி ட்ரம்பின் குரல் என்று நம்பப்படுகிற ஒரு குரல் ஆச்சரியத்துடன், "நீங் கள் பணியில் இருந்து விலகுவதாக தொலைக்காட்சியில் பார்த்தேன். இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்கிறது.

அதற்கு ஒமரோசா, "ஜெனரல் கெல்லி என்னிடம் வந்து, நீங்கள் அனைவரும் பணியில் இருந்து விலக வேண்டும் என்று விரும்புவதாக தெரிவித்தார்" என்று பதில் அளித்துஉள்ளார்.

உடனே ட்ரம்பின் குரல் என நம்பப்படுகிற அந்தக் குரல், "இல்லை.. என்னிடம் யாரும் இதைப்பற்றி சொல்லவில்லை. எனக்கு தெரியாது. நீங்கள் பணியில் இருந்து செல்வதை நான் விரும்பவில்லை" என்று கூறுகிறது. இப்படியாக அந்த உரையாடல் நீள்கிறது.

இது குறித்து ட்ரம்ப் நேற்று முன்தினம் டுவிட்டரில் கருத்து தெரிவிக்கையில்,

"அந்தப் பெண், பணியை இழந்த பின்னர் என்னைத் தாக்கத் தொடங்கி உள்ளார். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு வெள்ளை மாளிகை ஊழியர்களின் தலைவரை கேட்டு உள்ளேன்" என்று கூறி உள்ளார்.

ட்ரம்பின் சட்டத்தரணி ரூடி கிலானி கருத்து தெரிவிக்கையில்,

"வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தனிப்பட்ட உரையாடலை பதிவு செய்தன் மூலம் அவர் சட்டத்தை மீறி விட்டார்" என தெரிவித்துள்ளார். (இ)


## ஏவுகணைத் தாக்குதலில் 40 குழந்தைகள் பலி!

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தகவல்



(சனா)

ஏமன் நாட்டில் பேருந்து மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 40 குழந்தைகள் உட்பட 51 பேர் உயிரிழந்ததாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.



ஏமன் தலைநகரான சனா உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒடுக்க சவுதிஅரேபியா அரசின் உதவியை ஜனாதிபதி அப்துர் ரப்போ மன்சூர் ஹாதி நாடினார்.



இதையடுத்து, கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளின் மீது குண்டுமழை பொழிந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு பதிலடியாக ஹவுத்தி போராளிகளும் சவுதி அரேபியா நாட்டு எல்லைப்பகுதியில் உள்ள நகரங்களின் மீது ஏவுகணைகளை வீசி அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்த தாக்குதல்களில் இதுவரை பொதுமக்கள் உட்பட சுமார் 10 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையால் அந் நாட்டில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீர், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், ஏமனில் உள்ள ஹவுத்தி போராளிகள் சவுதி நாட்டின் ஜிசான் நகரின் மீது கடந்த புதன் கிழமை ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் கடந்த வியாழக்கிழமை சடா நகரின் மீது வான்வழித் தாக்குதல்களில் ஈடுபட்டன.

பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மிக தாழ்வாக பறந்து சென்ற போர் விமானங்கள் நடத்திய தாக்குதலின்போது அவ்வழியாக சென்ற பேருந்து மீது பல ஏவுகணைகள் வீசப்பட்டன. இந்த தாக்குதலில் 20 இற்கும் அதிகமான குழந்தைகள் உட்பட சுமார் 30 பேர் உயிரிழந்ததாக முதல் கட்ட செய்திகள் தெரிவித்தன.

குழந்தைகள் சென்ற பேருந்து மீது நடத்தப்பட்ட இந்த மனிதாபிமான தாக்குதல் தொடர்பாக நியாயமான பன்னாட்டு குழுவினரின் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கடந்த வெள்ளிக்கிழமை வலியுறுத்தி இருந்தது.

இந்த தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை என பின்னர் தெரியவந்தது. ஏமன் போராளிகள் மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரு தரப்பினருக்கும் அமெரிக்காவில் இருந்து போராயுதங்கள் அனுப்பப்பட்டு வரும் நிலையில், இந்த தாக்குதலுக்கு பயன் படுத்தப்பட்ட ஏவுகணைகளை அமெரிக்க அரசு விற்கவில்லை என அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இதற்கிடையில், பேருந்து தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அனைவரின் உடல்களும் கடந்த திங்கட்கிழமை ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன. பலியானவர்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் இந்த தாக்குதலுக்கு காரணமாக சவுதி அரேபியா அரசு மற்றும் அமெரிக்க அரசை கண்டித்து கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட் டனர்.

இந்நிலையில், சடா நகரின் மீது சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் கடந்த வியாழக்கிழமை நடத்திய பல்வேறு தாக்குதல்களில் பேருந்து மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மட்டும் 40 குழந்தைகள் உட்பட 51 பேர் உயிரிழந்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

மேலும் சில பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 51 குழந்தைகள் உட்பட 79 பேர் படுகாயம் அடைந்ததாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முன்தினம் வெளி யிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கடல்பகுதியில்அமைந்துள்ள மோக்கா நகரில் கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சவுதி தலைமையிலான படைகள் ஒரு திருமண மண்டபத்தின் மீது நடத்திய வான் வழித் தாக் குதலில் 131 பேர் உயி ரிழந்தனர். பலர் படுகாய மடைந்தனர்.

இதேபோல், கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சனா நகரில் நடைபெற்ற ஒரு இறுதி ஊர்வலத்தின் மீது நடத்தப்பட்ட மேலும் ஒரு தாக்குதலில் 140 பேர் கொல்லப்பட்டனர். இவ்விரு தாக்குதல்களும் குறிதவறி நடந்த அசம்பாவித சம்பவங்கள் என தெரிவித்துள்ளது. மேலும், அப்பாவி பொதுமக்களை ஹவுத்தி போராளிகள் மனித கேடயங்களாக பயன்படுத்துவதால் இதுபோன்ற உயிரிழப்புகள் தவிர்க்க முடியாதவை என்றும் கூட்டுப்படைத் தளபதிகள் சமாதானம் கூறி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வலுக்கும் அமெரிக்கா, துருக்கி மோதல்

### அமெரிக்க மின்னணுப் பொருட்களை புறக்கணிக்க துருக்கி திடீர் முடிவு

(அங்காரா)

துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் உலோகப் பொருட்களுக்கு அமெரிக்கா இரட்டிப்பு வரிவிதித்ததை தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மின்னணுப் பொருட்களை புறக்கணிக்க துருக்கி முடிவு செய்துள்ளது.



துருக்கியில் இராணுவப் புரட்சி மூலம் கடந்த 2016 ஆம் ஆண்டு ஆட்சி கவிழ்ப்பு முயற்சி மக்கள் செல்வாக்குடன் முறியடிக்கப்பட்டது. இதற்கிடையே, ஆட்சி கவிழ்ப்பிற்கு திட்டம் தீட்டிய துருக்கிய அரசியல் குழு ஒன்றுடன் அமெரிக்க கத்தோலிக்க மதகுரு ஆண்ட்ரூ பரன்சன் என்பவர் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கு காரணமாக கூறப்படுவது துருக்கியின் நீதித்துறை மற்றும் உள்துறை அமைச்சர்கள் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளமை. மேலும், துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் உலோகப் பொருட்களுக்கு இறக்குமதி வரியை அமெரிக்கா இரட்டிப்பாக உயர்த்தியுள்ளது.

ஆனால், ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை விமர்சனம் செய்து தொடர்ந்து ஈரானிடம் இருந்து துருக்கி கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய முடிவெடுத்ததற்கு, பழி வாங்கும் செயலாகவே தங்கள் நாட்டின் மீது அமெரிக்கா தடைகளை வித்தித்துள்ளது என துருக்கி குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் தடையினால் ஆசிய வர்த்தகத்தில் எப்போதும் இல்லா அளவிற்கு டொலருக்கு நிகரான துருக்கியின் நாணயமான லிராவின் மதிப்பு கடும் சரிவை கண்டுள்ளது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக் காவில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருட்களை புறக்கணிக்க துருக்கி முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து துருக்கியின் ஜனாதிபதி எர்டோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

துருக்கியின் பொருளாதாரத்தை சீர் குலைக்கும் நோக்கில் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

அமெரிக்காவின் எவ்வித மிரட்டல்களுக்கும் துருக்கி பணிந்து போகாது.

அவர் களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்காவில் தயாரிக்கப்படும் மின்னணு பொருட்களை புறக்கணிப்போம்.

ஐபோன்களுக்கு பதிலாக சாம்சங் அல்லது துருக்கியின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தொலைபேசிகளை பயன்படுத்தலாம்.

நாட்டில் பணவீக்கம் மற்றும் நடப்புக் கணக்கு பற்றாக்குறை இருப்பது உண்மை தான்.

இருப்பினும் சரிவை சந்தித்துள்ள லிராவின் மதிப்பை உயர்த்தும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஊடகவியலாளர் கடத்தி சித்திரவதை மகிந்தவிடம் நாளை விசாரணை



(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, நாளை 17ஆம் திகதி, வாக்குமூலம் அளிக்க முன்னிலையாகுமாறு, மகிந்த ராஜபக்ஷவுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன வினால், இந்த அழைப் பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்கு மூலம் அளிக்க முன்வருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே நான்கு தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்கவில்லை.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கே சென்று வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

முன்னதாக, சபாநாயகர் கரு ஜெயசூரியவிடமும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலத்தைப் பெற்றிருந்தனர்.

அப்போது அமைச்சராக இருந்த தாமே, கீத் நொயர் கடத்தல் தொடர்பாக, ஜனாதிபதி மகிந்தவுக்கு முதலில் தெரியப்படுத்தியதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய, கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊடகவியலாளர்களை வெளியேற்றிய முன்னாள் ஜனாதிபதியால் பரபரப்பு



(கொழும்பு)

அத்தனகல பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இணைத்தலைவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிலையில், அங்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்ததையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் குறித்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 14 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பிக்கப் பட்டிருந்ததன் பின்னர், அங்கு செய்தி சேகரிக்க ஏன் ஊடகவியலாளர்கள் வந்திருக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி எழுப்பினார்.

செய்தி சேகரிக்க பிரதேச செயலாளரிடமிருந்து கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப் பட்டிருந்ததாக இதன்போது ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் ஊடகவியலாளர்கள் வெளியேறா விட்டால் தான் இந்த கூட்டத்திலிருந்து வெளியேறப் போவதாகவும், ஊடகவியலாளர்கள் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வது என்றால், முறையே ஊடக அமைச்சினூடாக அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்களுக்கும் அவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

தற்போது இச்சம்பவம் தொடர்பான காணொலி சமூகவலைத்தளங்களில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பில் பாகிஸ்தான் போர்க்கப்பல்

(கொழும்பு)

பாகிஸ்தானின் கடல்சார் பாதுகாப்புப் படையின் போர்க்கப்பலான, பி.எம்.எஸ்.எஸ் காஷ்மீர், நான்கு நாட்கள் நல்லெண்ண பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் பாகிஸ்தான் போர்க்கப்பலுக்கு, இலங்கைக் கடற்படையினர் வரவேற்பு அளித்தனர்.

இலங்கைக் கடற்படையின் மேற்குப் பிராந்திய கட்டளை அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளும், பாகிஸ்தான் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சஜாட் அலி உள்ளிட்ட பாகிஸ்தான் இராஜதந்திரிகளும் கொழும்பு துறைமுகத்தில் பி.எம்.எஸ்.எஸ். காஷ்மீர் போர்க்கப்பலை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

95 மீற்றர் நீளமான பி.எம்.எஸ்.எஸ் காஷ்மீர், போர்க்கப்பலில், 74 மாலுமிகளும் அதிகாரிகளும் பணியாற்றுகின்றனர்.



கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும்போது, பாகிஸ்தான் கப்பலில் உள்ள மாலுமிகள் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர். (இ)

# முன்னாள் முதல்வர் சந்திரகாந்தனை குறைகூற எந்த அரசியல்வாதிக்கும் அருகதையில்லை

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மேற்கொண்ட அபிவிருத்தியை குறைகூற மட்டக்களப்பில் எந்த அரசியல்வாதிக்கும் அருகதை இல்லை என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் கே. காந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் 7 ஆவது சபை அமர்வு நேற்று இடம் பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.



தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்

அண்மைக்காலமாக எமது கட்சியைப் பற்றியும் கட்சியின் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியைப் பற்றியும் சில தரப்பினர் விமர்சித்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

எமது மாநகரத்தைப் பொறுத்தவரையில் இம் மாநகரத்தின் முதல் முதல்வராக இருந்த இராஜதுரை பின்னர் எமது கட்சியின் தலைவர் சந்திரகாந்தனின் முயற்சியினாலேயே அதிக அபிவிருத்தியை இந்த மாநகரம் கண்டுள்ளது.

அதன் காரணமாகவே எமது தலைவரை இந்த மாவட்டத்தின் மக்கள் இன்னும் மறக்காமல் உள்ளனர்.

அதன் வெளிப்பாடுதான் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துவமாக நின்று போட்டியிட்ட எமது கட்சிக்கு மக்கள் 43000 இற்கும் மேற்பட்ட வாக்குகளை வழங்கி மாவட்டத்தில் 36 ஆசனங்களை தேர்ந்தெடுத்துள்ளனர்.

எமது கட்சியின் வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாது தற்போது நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அரசியலில் இணைந்தவர்கள் எமது கட்சித் தலைவரை விமர்சிப்பது நகைப்பிற்குரிய விடயமாகும்.

முடியுமாக இருந்தால் அவரை விமர்சிப்பவர்கள் இந்த மாவட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கும், மக்களின் தேவைகள் எவ்வளவோ இருக்கிறது அவற்றினை நிவர்த்தி செய்துவிட்டு விமர்சனங்களை முன்வைக்கட்டும்"என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# கடுமையான கருத்து ஏன்?

"அந்தாளைக் கண்டாலே எனக்குப் பத்திக்கிட்டு வருது?" என்று சொல்வதற்கும், "அவரை எனக்குப் பிடிக்காது" என்று சொல்வதற்குமிடையே வேறுபாடுகள் இருக்கின்றன.

முன்னது கடுமையான கருத்து (strong opinion), பின்னது வெறும் கருத்து (just an opinion) நான் பஸ்ஸில் பயணம் செய்வதைக் கூடுமான வரை தவிர்த்து விடுவேன். ரயில்தான் சௌகரியம் என்று சொல்கிறவரை கொஞ்சம் கணக்கில் சேர்த்துக்கொள்ளலாம்.

"பஸ்ஸா ? மனுசன் போவானய்யா அதில? ரயில்னா டிக்கெட்டு எடு பஸ்ஸுனா பயணமே வேண்டாம்" என்பவர்கள் கடுமையான கருத்துக்குரியவர்கள்.

"இனிமே அந்த மிருகத்தோட வாழ மாட்டேம்மா" என்று சொல்வது கடுமையான கருத்து. "பின்னாடி எப்படியோ இப்போதைக்கு அவரோடு என்னால் வாழ முடியும்னு தோணலைம்மா" மிதமான கருத்து யதார்த்தமானதும்கூட!

இரண்டாவது ரகத்தினர் இத்தகைய மனோபாவத்தில் பல நேரங்களில் அவதிக்குள்ளாவார்கள் . வேறு வழி இல்லாமல் தங்கள் கடுமையான கருத்தை ஒட்டிச் செயற்பட நேரும் போது அதைப் பெரிய தண்டனையாகக் கருதுவார்கள் .

இவர்கள் ஒன்றை நினைவில் கொள்வது நல்லது.

சூழ்நிலைகள் நம்மை வெகுவாக ஆட்டிப்படைக்கின்றன. அவற்றை நாம் அவ்வளவு எளிதில் வெற்றி கொள்ள முடிவதில்லை. இவற்றை வெற்றி கொள்ள மாபெரும் செல்வாக்கு உள்ளவர்களாகவோ செல்வம் உள்ளவர்களாகவோ இருக்க வேண்டும். பெரும்பாலானவர்களின் நிலைமை இப்படி இல்லையே!


இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து கொண்டு கடுமையான கருத்துக்களை உடையவர்கள் சூழ்நிலைகளின் கைதிகளாகி, அவற்றைப் பின்பற்ற நேரும் போது அவமானப்படுவதையும் கேலிக்கு உள்ளாவதையும் பார்க்கிறோம்.

கடுமையான கருத்தை உடையவர்கள் பக்குவமற்ற வாழ்க்கைப் பார்வை இல்லாதவர்களாவும், உணர்ச்சிபூர்வமானவர்களாகவும் எதையும் முன்கூட்டியே கணிக்கும் ஆற்றல் இல்லாதவர்களாவும் நடைமுறை வாழ்க்கைக்குச் ஒத்து வராதவர்களாகவும் இருப்பார்கள். இந்தக் குறுகிய வலையில் நாம் சிக்கி விடக் கூடாது.

ஒரு விடயத்தில் கடுமையான கருத்தைக்கொண்டிருப்பது என்பது ஒரு சாதாரண தோல் தொல்லையை நாமே சுரண்டி அதைப் பெரிய புண்ணாக்கிக் கொள்வதைப் போன்றது. இது நன்மையைச் செய்யாது.

**லேனா தமிழ்வாணன்**

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



இலங்கையின் வட பால் யாழ்ப்பாணத்து நல்லூரிலே சரித்திரப் பிரசித்தி பெற்றதும் தொன்மையும் அழகும் வாய்ந்ததுமான நல்லூர் கந்தனுடைய 2018 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா விளம்பி வருடம் தமிழ் ஆடி 31 ஆம் திகதி (16.08.2018) வியாழக்கிழமை இன்று காலை 10.30 மணிக்கு வெகு சிறப்பாக இனிதாக இடம்பெறுகின்றது.

ஆடிஅமாவாசைக்குஆறாம் நாள் நல்லைக் கந்தனின் ஆண்டுமஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்து ஐந்து தினங்கள் இடம்பெற்று கந்தனின் திருக்கல்யாணத்துடன் இனிதேநிறைவுபெறும். அழகன் என்றால் முருகன், முருகன் என்றால் அழகன். அந்தஅளவிற்குஅள்ளிஅள்ளி வழங்கக் குறையாத முருகன் தன்னை வழிபடும் பல்லின மக்களுக்கும் அருள் சுரந்து கொண்டு இருக்கின்றார். திருவிழாக் காலங்களில் யாழ். நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும். நல்லையம்பதி இந்திரலோகம் போலக் காட்சியளிக்கும். இத்தகைய மகத்துவம் நல்லை மண்ணுக்குண்டு.

கொடிச்சீலை வடிவமைப்பாளரிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு கடந்த 06.08.2018 ஆம் திகதியன்று கல்வியங்காட்டிலே இடம் பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தல் கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றைத் திருக்கை மாட்டு வண்டி மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெரும் திருவிழாவிற்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது. கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையானது சிவஞான முதலியார் பரம்பரையில் கந்தையா- தர்மகுல சிங்கம் என்பவரின் இல்லத்திற்குச் சென்று ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாரினால் பாரம்பரிய முறைப்படி கையளிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடந்தோறும் தலைமுறை தலை முறையாக செங்குந்த மரபில் வந்த திருசிவஞான முதலியாரின் பேரனால் நல்லூர் முருகனின் கொடியேற்றத்திற்கு முதல் நாள் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமை ந்துள்ள வைத்தியரது வீட்டில் இருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் கொடிச்சேலை எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வைரவநாதர்-வல்லிபுரசாமியால் அமைக்கப்பெற்ற கொடித்தேர் மடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெற்று அழகிய சித்திரத்தேரில் பக்த அடியார்கள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க, நல்லூர் பிரதான வீதி வழியாக எடுத்துவரப்பட்டு பிரதம சிவாச்சாரியா ரிடம் ஒப்படைக்கப்படும். இதுவே பல்நெடுங் காலமாக உள்ள பாரம்பரிய நடைமுறை.


நல்லூர் பதியிலே வீற்றிருந்து தம்மை நாடி ஓடி வரும் பக்தர்களுக்கு அருளினை வழங்கும் முருகப் பெருமான் நல்லூர் பதியிலே வீற்றிருந்து தீந்தமிழால் ஔவைக்கு உபதேசம் செய்த முருகனை அலங்காரக் கந்தன் என்றும் செல்வச் சந்நிதி ஆற்றங்கரை தன்னிலேவீற்றிருந்துதன்னை அண்டினோர் பசிபோக்கும் முருகனை அன்னதானக் கந்தன் என்றும் மாவிட்டபுரத்திலே வீற்றிருந்து சூரனைப் போரில் வென்று தேவர் சிறை மீட்ட முருகனை அபிஷேகக் கந்தன் என்றும் கதிர்காமத்திலே வீற்றிருந்து தினைப் புனத்திலே வள்ளியெம்பிராட்டியைக் கவர்ந்த முருகனை காவடிக் கந்தன் என்றும் பக்தர்கள் புனைபெயர்களால் அழைக்கின்றார்கள்.

நல்லூர் கந்தன் மஹோற்சவ காலங்களில் தினம்தோறும் நல்லூர் ஆறுமுக நாவலர்மணிமண்டபம்,நல்லை ஆதீன மண்டபம், துர்க்கா மணி மண்டபம் ஆகிய மண்டபங்களின் மாலை வேளைகளில் தெய்வீக இசை அரங்குகளும் ஆன்மீக அருளுரைகளும் இடம் பெறுகின்றன.

நல்லூர் தேரடிக்கு அருகாமையில் அமைந்துள்ள அறுபத்துமூன்று நாயனார் குருபூசை மண்டபம், நல்லூர் துர்க்கா மணிமண்டபம், நல்லூர் பின்வீதியில் உள்ள முத்துத்தம்பி மணிமண்டபம், நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் என்பவற்றில் அடியார்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே தெய்வீக மணம் கமழும் இன்றைய கொடியேற்றத் திருவிழா பொன்னாளிலே நல்லூர் மண்ணிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு நல்லூர் முருகன் வல்வினை அகற்றி, நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ அருள்பாலித்து இந்த மண்ணிலே எல்லோரும் இன்புற்று மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்க அருள்பாலித்து இந்த மண்ணிலே மண்ணில் நல்ல வண்ணம் வாழ திருவருள் பாலிப்பாராக!

**கந்தையா-கனகசபை**
**சண்டிலிப்பாய்.**






வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில்வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயபூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.



செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச் சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும்.

அதன்படி யாழ்.சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகிலுள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் நேற்று காலை 9 மணிக்கு நடைபெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்து வரப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (படங்கள்:-பொ.சோபிகா)






## பஞ்சம் நோய் துயர்களை பஞ்சாகப் பறக்கச் செய்வாய்...

*நஞ்சரவை ஆர்வமுடன் ஆரமென அணிந்திருக்கும்*
*செஞ்சடையன் திருவருளால்- உதித்தோனே*
*பஞ்சமொடு நோய்துயரைப் பஞ்செனவே பறந்திடச் செய்*
*மஞ்ஞையிலே ஏறியுலா- வருவோனே*
*குஞ்சரத்தைக் காட்டியந்தக் குஞ்சரியைக் கரம்பிடித்து*
*மஞ்சமதிற் துயில் புரிந்த- மணவாளா*
*மஞ்சைத்தொடும் கோபுரங்கள் நெஞ்சைத்தொட ஏறியதிற்*
*கொஞ்சிமதி விளையாடும்-நல்லூரா*

**சின்னையா சிவபாலன்**
**கோண்டாவில்.**

## நல்லையில் கொடியேற்றம் காணவாரீர்...!

*தமிழ்க் கடவுள் முருகனின் கொடியேறுது*
*தரணியெங்கும் கந்தன் புகழ் பாடுது*
*அலங்காரக் கந்தனின் சிறந்தகொடியேறுது*
*அகிலம் எங்கும் பக்திபரவசமாகிது*

*ஆறுபடை வேலவனின் அருள் பெற்றிட*
*அடியவர்கள் வாய்களில் அரோஹரா ஒலித்திட*
*அழகியவேலவன் எழுந்தருளி வந்திட*
*அமரர்களின் நாயகன் வேலவன் கொடியேறிட*

*நல்லூரான் பாதம் தொழுது சிறந்திடுவோம்*
*நன்மைகள் பெற்று வாழ்வில் உயர்ந்திடுவோம்*
*நாற்படையையும் வேல் படையால் வென்றிடும்*
*நல்லைக் கந்தனின் கொடியேற்றம் காணவாரீர்*

**அரியாலையூர் கு.யசிதீபன்**

## நாளுமவன் திருவடி பற்றுவோம்

*நல்லைக் கந்தன்*
*பெயரைச் சொல்லச் சொல்ல*
*நாவெல்லாம் இனிக்குதே...*
*வந்த வினையறுத்து*
*வாழ்வளிப்பான்*
*செல்லக்குமரன் வேலவனே...*
*எந்தக் கணத்திலும்*
*எண்ணியபடியே*
*வந்தருள் புரிவான்*
*வண்ண மாமயிலோனே...*
*சந்தக் கவிபாடி*
*நாளுமவன் திருவடி*
*பற்றுவோமே*
*சகலதும் தந்திடுவான்*
*பேரின்பம் பெற்றிடவே..*

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்.**

## நல்லைக் குமரப் "பா"

கலியுக வரதன் கரைகாணாக்
கருணை பொழியும் காருண்யன்
மெலிவை நீக்கி மேதினியில்
மேவும் இன்பம் நல்கிடவே
வலிவாம் நல்லூர்ப் பதியினிலே
வனப்பாய்க் கொடியு மேறிடவே
பொலிவாம் வந்தெம் குறைபோக்கும்
புகழ்வேல் நல்லைக் குமரப்பா!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்**

# பிணைமுறி மோசடிக்காரர்களுக்கு மகிந்த ஆட்சிக்காலத்தில் தண்டனை

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீளவும் திறைசேரிக்குக் கொண்டுவரவும் மோசடியாளர்கள் மீது உரிய நடவடிக்கைகளையும் மகிந்த ஆட்சியில் முன்னெடுப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மத்திய வங்கி பிணைமுறி மோசடியை இந்த அரசாங்கம் மூடி மறைப்பதற்கே தற்போது முயற்சித்து வருகிறது.

எவ்வாறாயினும், அடுத்தாண்டு மகிந்த தலைமையில் அமையவுள்ள அரசாங்கத்தில் இதுகுறித்து கடுமையான விசாரணைகளை மேற்கொள்வோம் என்பதை



நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசியாவிலேயே இடம்பெற்ற பாரிய வங்கி மோசடியாகவே இது கருதப்படுகிறது. எனவே, இதனை மக்களிடத்திலிருந்து மறந்து போகச் செய்ய நாம் இடமளிக்கப் போவதில்லை. இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் நாம் நடவடிக்கை எடுப்போம்

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர்கள், அதிகாரிகள் மட்டுமன்றி இதற்கு ஒத்துழைத்த மற்றும் மறைமுகமாக உதவிய அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கையை எடுத்தே தீருவோம்.

இவர்களுக்கு தண்டனை மட்டும் கொடுப்பது போதாது. ஏனெனில், இவர்களின் இந்தச் செயற்பாட்டினால் நாட்டு மக்களே பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால், மக்களுக்கு ஏற்பட்ட இந்த நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் குற்றவாளிகளிடமிருந்து மீண்டும் அந்த பணத்தை பெற்றுக்கொள்ளவும் நாம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

இந்தப் பணத்தை திறைசேரிக்குக் கொண்டு வரும் சட்டம் இல்லாவிட்டால் கூட நாம் புதிய சட்டத்தின் ஊடாக கொள்ளையடிக்கப்பட்ட அந்தப் பணத்தை மீளக் கொண்டு வருவோம். அத்துடன், இந்த பணம் 2015 பொதுத் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இது எந்தக் கட்சிக்கு அல்லது எந்த வேட்பாளருக்கு பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பிலும் நாம் தீவிர விசாரணைகளை மேற்கொள்வோம்.

இவையனைத்தையும் வெகுவிரைவில் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## நீர்த்தேக்கத்தின் வான் கதவு திறப்பு



(கொழும்பு)

மலையக பகுதிகளில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்து பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித் துள்ளது.

இதனால் மேல்கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

இதன் விளைவாக அதிகரித்து வரும் நீரினை வெளியேற்றுவதற்காக நேற்று முன்தினம் பல நீரேந்து பகுதிகளில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், காசல்ரீ நீர்த்தேகத்தின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதால், தாழ்வான பிரதேசத்தில் வாழும் குடியிருப்பாளர்களை அவதானத்துடன் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (இ)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 4 (ராகு)

## (சாகசச்சக்கரவர்த்திகள்)

**துரதிர்ஷ்ட நாட்கள்**

தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்சியையும் 4,13,22,31 ஆகிய நாட்களிலும் 8,17,26 ஆகிய நாட்களிலும் செய்யக் கூடாது. இந்த இரண்டு எண்களும் சந்திக்கும் நாட்களில் மிகப்பெரிய தோல்விகள் கிடைக்கும். பெரும் நட்டம் ஏற்படும். தவறான நாளில் பெற்ற வெற்றிகள் நிலைக்காது. உடனே பறிபோய்விடும். 7,16,25 திகதிகளில் எதிர்பாராத விபத்துக்கள் நேரும். ஆகாத நாட்களில் முக்கியமான காரியங்களில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தாலே போதும். அதிர்ஷ்டமடைய, துரதிர்ஷ்ட நாட்களை விலக்கி, அதிர்ஷ்ட நாட்களில் முக்கியமான காரியங்களை மேற்கொண்டாலே போதும். பன்மடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனக்கலர் போன்ற வர்ணங்கள் சூரிய ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும். அணியும் ஆடையும், வசிக்கும் இடங்கள், பேனா,பென்சில், விசிடிங் கார்டுகள், வண்டி வாகனம் போன்ற அனைத்து விதமான உபயோகப் பொருட்களையும் அதிர்ஷ்ட நிறங்களில் உபயோகித்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட நிறப் பேனாவால் அதிர்ஷ்ட நிறமையால் கையெழுத்திட்டு வரவேண்டும். விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**


கறுப்பு, கோப்பிக்கலர், இருண்ட நிறங்கள் இவர்களுக்கு வீண் அலைச்சலையும், மனக்குழப்பத்தையும் ஏற்படுத்தும். பல நிறங்கள் கலந்து இருண்ட நிறங்கள் இவர்களுக்கு காரியத் தடைகளையும் காரியத் தோல்வியையும் ஏற்படுத்தும். வீணான பிரச்சினைகளில் தலையிட்டு மாட்டிக் கொள்வார்கள். மன உளைச்சலைத்தரும்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

கோமேதகம், வெளிர் நீலக்கல், ஒபல், அக்கோமரின் போன்றவை அதிர்ஷ்ட இரத்தினங்களாகும். வலது கை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட இரத்தினங்களை தோஷமில்லாததாகப் பார்த்து அவரவர் அதிர்ஷ்ட நாளன்று வாங்கி, அதிர்ஷ்ட நாளில் அணிந்து கொள்ள வேண்டும்.

**அதிர்ஷ்ட உலோகம்**

தங்கம் இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். தாமிரம், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களை சேர்த்தும் அணிந்து கொள்ளலாம். காப்பு, அட்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்ட இரத்தினங்களை தங்க மோதிரத்தில் பதித்து அணிந்து கொள்ளலாம். அதிர்ஷடம் பன்மடங்கு விருத்தியாகும்.




**4ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

பெயரை அதிர்ஷ்டகரமாக மாற்றிய பிறகு இவர்கள் தாங்கள் குறியிடும் கையெழுத்தையும் அதிர்ஷ்டமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இராகு ஆதிக்க வசிய எழுத்துக்களைப் பாம்பு போல வளைவுக் குறியிட்டு பெரிய எழுத்தாக அமைக்க வேண்டும். வலப்புறச் சுழியுடன் ஆரம்பித்துப் போகப்போக மேல் நோக்கி சாய்வாக ஆரம்பம் முதலே குறியிட வேண்டும். 4 செ.மீ. இற்கு மேல் குறியிட வேண்டும். பாதிக் கையெழுத்திற்குக் கீழ் கையெழுத்தின் எழுத்துக்களை அடிக்காமல் அடிக்கோடு ஒன்று மேல்நோக்கி சாய்வாக அமைந்திட வேண்டும்.

நிலையான நீடித்த பலன்கள் கிடைக்கும். கோடிட்ட கையெழுத்து தீய பழக்கவழக்கத்திற்கு அடிமையாகாமல் காப்பாற்றும். ராகு ஆதிக்க எழுத்துக்களை தெளிவாகக் குறியிட வேண்டும். மற்ற எழுத்துக்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. கோபுர அம்சத்துடன் மேல் புள்ளிகள் கொண்ட கையெழுத்துக்கள் வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்கும்.

சுகமான வாழ்க்கை யும் எப்போதும் கையில் பணம் தங்கும் அமைப்பும் உருவாகும். சமுதாயத்தில் அந்தஸ்து கூடி முக்கிய பிரமுகராக வலம் வருவார்கள். தேரோட்டி தேரோட்டுவது போல நீண்டகோட்டுடன் முடிவடையும் கையெழுத்து நீடித்த அதிர்ஷ்டத்திற்கு ஆளாக்கும்.

அனைத்துப் பிரச்சினைக்கும் முற்றுப் புள்ளி வைக்கலாம். கீழ் நோக்கி இழுத்த குறியீட்டால் பெரிய தோல்விகள், பதவி இழப்புகள், அவமானங்கள், தானடைய வேண்டிய பலனை மற்றவர்கள் எளிதில் தட்டிச் செல்லுதல் போன்ற கெட்ட பலன்கள் நடக்கும். வீண் வம்புகள், வழக்குகள் வாழ்க்கையை வாட்டியெடுக்கும்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

19



“பிரித்தானியர் வருகையின் போது, சிங்கள மக்களே தெற்கில் மிகப் பெரும்பான்மையான மக்களாகவும் இருந்தனர். இவற்றின் விளைவாக, ஆங்கில அறிஞர்கள், குறுகிய நோக்கங் களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாளி, சிங்கள நூல்களை தமது ஆய்வுக்கு ஆதாரமாகக் கொண்டு அநுராதபுர இராச்சியத்தை மையப்படுத்தியும் பௌத்த மதத்தை உள்ளடக்கியும் காணப்பட்ட கட்டட அழிபாடுகளையும் கல்வெட்டுக்களையும் மட்டுமே கருத்திற் கொண்டு இலங் கையின் ஆரம்ப கால வரலாற்றை பௌத்த சிங்கள வரலாறாகவே எழுதி வைத்தனர்.”

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

இவ்வாறான குறிப்புக்கள் மூலம், அநுராதபுரத்தில் தமிழர்களும் ஆட்சி செய்திருக்கின்றார்கள் என்பதை மகாவம்சம் மூலம் அறிய முடிகின்றது. இச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு நவீனகால வரலாற்று அறிஞர்களால், இலங்கையின் ஆரம்பகால வரலாற்றை, பௌத்த சிங்கள வரலாறாகவும் எழுத முடிந்தது என்ற பின்னணியை விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது. இலங்கையின் நவீனகால வரலாற்றில், பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியாகிய பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

பிரித்தானியர் 1796இல் இலங்கையில் தமது காலனித்துவ ஆதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கினர். அக் காலத்திலிருந்து இலங்கையில் கடமை புரிந்த, பிரித்தானிய சிவில் அதிகாரிகளும் சில கல்விமான்களும் இலங்கை வரலாற்றை அறிவதில் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அதன் விளைவாக, அவர்கள் இலங்கையின் வரலாற்றையும் அறியத் தலைப்பட்டனர். அப்பொழுது அவர்களுக்குக் கிடைத்தவை மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்களும் அதன் பின்னர் அந்நூல்களையொட்டி எழுதப்பட்ட சிங்கள நூல்களுமாகும்.

தமிழர் வரலாறு பற்றிக் கூறும் நூல்களாகிய வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களை அவர்கள் கருத்திற் கொண்டதாகவோ அல்லது அறிந்திருந்ததாகவோ தெரியவில்லை.

மேலும், இலங்கையில் தென்னிந்திய சோழர் ஆதிக்கம் முடிவடைந்த கி.பி பதினொராம் நூற்றாண்டிலிருந்து, புராதன சிங்கள இராச்சியங்களான அநுராதபுர இராச்சியம், பொலநறுவை இராச்சியம் என்பன கைவிடப்பட்டு, சிங்கள அரசுகள் தமது இராசதானிகளைத் தெற்கு நோக்கி தம்பதெனியா, கண்டி, கோட்டை போன்ற பிரதேசங்களுக்கு நகர்த்தத் தொடங்கினர். இதன் விளைவாக புராதன நகரங்களான அநுராதபுரம், பொலநறுவை போன்றவை காடு சூழ்ந்த பிரதேசங்களாக மாறியிருந்தன.

அந்த இடங்களில் இருந்த கட்டடங்களும் சிற்பங்களும் ஓவியங்களும் கல்வெட்டுக்களும் எதுவித அழிவுகளுக்கும் உட்படாது கைவிடப்பட்ட நிலையில் இருந்தன. வரலாற்று ஆர்வம் கொண்ட ஆங்கிலேயர் அவ்விடங்களுக்குச் சென்று மேலாய்வுகள் மேற்கொண்டபோது, அவ் அழிபாடுகளும் கல்வெட்டுக்களும், சிற்பங்களும் ஓவியங்களும் அவர்கள் பார்வையில் தென்பட்டன.

அச் சான்றுகள் பௌத்தமதம் பற்றிய செய்திகளையும் சிங்கள அரச வரலாறு பற்றிய தகவல்களையும் இயல்பாக அவர்களுக்கு வழங்கின. அதன் பயனாக அவ் அறிஞர்கள், பாளி நூல்களில் வரும் வரலாறு நிகழ்வுகளோடு மேற்கூறப்பட்ட் தொல்லியல், கல்வெட்டு, ஆதாரங்களையும் ஒப்பிட்டு நோக்கிய பொழுது, அது பௌத்த சிங்கள வரலாறாகவே காணப்பட்டது.

எனவே வரலாற்றை எழுத முற்பட்ட ஆங்கிலேயர், அநுராதபுர இராச்சியந்தான் இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு இராச்சியம் என்றும், பௌத்த மதந்தான் இலங்கை மக்களின் புராதன மதம் என்றும் கருதியிருக்கின்றனர்.

அத்தோடு, பிரித்தானியர் வருகையின் போது, சிங்கள மக்களே தெற்கில் மிகப் பெரும்பான்மையான மக்களாகவும் இருந்தனர். இவற்றின் விளைவாக, ஆங்கில அறிஞர்கள், குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாளி, சிங்கள நூல்களை தமது ஆய்வுக்கு ஆதாரமாகக் கொண்டு அநுராதபுர இராச்சியத்தை மையப்படுத்தியும் பௌத்த மதத்தை உள்ளடக்கியும் காணப்பட்ட கட்டட அழிபாடுகளையும் கல்வெட்டுக்களையும் மட்டுமே கருத்திற் கொண்டு இலங்கையின் ஆரம்ப கால வரலாற்றை பௌத்த சிங்கள வரலாறாகவே எழுதி வைத்தனர்.

மேலும், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில், போலந்தில் ஏற்பட்ட பிரிவினை, பிரான்சியப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி என்பன மேலைத்தேய நாடுகளில் தேசியவாதக் கருத்துக்களும் தேசவிடுதலைப் போராட்டங்களும் முனைப்படைவதற்கு வழிவகுத்தன. தேசவிடுதலைப் போராட்டங்களில் தேசங்களின் வரலாறும், இனக் கொள்கைகளும் முக்கிய ஆயுதங்களாக முன்வைக்கப்பட்டன.

இதில் ஜேர்மனி போன்ற நாடுகள் முன்னணியில் நின்றன. அத்தோடு மேலைத்தேயப் பல்கலைக்கழகங்களில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மொழிகளும், வரலாறுகளும் கற்கைநெறிக்கு உட்படுத்தப்பட்டு, ஆய்வுக்களங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஆய்வு முயற்சியின் விளைவாக William Jones என்பவர் Structural Affinities Between Indian and Eurupean Languages என்ற நூலை 1788களில் பிரசுரித்தமை, இந்தியா-ஐரோப்பியா தொடர்பான ஆரியமொழி, ஆரிய இனம் பற்றிய சிந்தனையின் மைல்கல்லாக அமைந்தது.

தொடர்ந்து 1819இல் Friedrich Schegel என்பவர் ஆரிய இனம் பற்றியும், ஆரியமொழித் தொடர்புகள் பற்றியும், தனது ஆய்வு களை வெளியிட்டார். அதேபோன்று, Hegel, Maxmuller போன்றவர்களும் தங்கள் ஆய்வுகளை இவ்விடயம் சம்பந்தமாக எழுதி வெளியிட்டனர். இதன் விளைவாக ஒரு புதிய, ஆரியர் இனம் சம்பந்தமான கொள்கையாக (Aryan Theory - as a new racial theory) இந்திய-இலங்கை மக்கள் மத்தியிலும், ஐரோப்பாவிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இதேகாலப் பகுதியில் குறிப்பாக, 1908ஆம் ஆண்டில் முதன் முதல் வில்ஹைறம் கெய்கர் (Wilhelm Geiger) என்பவரால் மகாவம்சம் ஜேர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. பின்னர், மாபெல் ஹெனெஸ் பொடே (Maybel Haynes Bode) என்பவரால் மகாவம்சம் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

பின்னர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேராசிரியர் கெய்கர் அவ் ஆங்கில மொழிபெயர்ப்பைத் திருத்திய பதிப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதனால் மகாவம்சம் மிகவும் பிரபல்யமடைந்து காணப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகளின் விளைவாக இலங்கையிலும் சிங்கள தேசியவாதத்தின் ஆரம்ப எழுச்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து முளைவிடத் தொடங்கின.

அதே நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதியில், சிங்கள தேசியவாதத்தின் முக்கிய கர்த்தாவான அநாகரிக தர்மபாலா போன்றவர்கள் பௌத்த சிங்கள தேசியவாதத்தை முன்னெடுத்துச் சென்றமையைக் காண முடிகின்றது.

இதுபற்றி பேராசிரியர் குணவர்த்தனா, Ethnicity and Social Change in Sri Lanka (1979) என்ற நூலில், The People of the Lion; Sinhala Consciousness in History and Historiography என்னும் கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

“குடியேற்றவாதக் காலத்திலேதான், சிங்கள உணர்வு ஒரு புரட்சிகர மனமாற்றத்துக்கு உள்ளாகி அதன் தற்போதைய நிலையை அடையத் தொடங்கியது.

தமது குழு உணர்வை மேம்படுத்தும் விடயத்தில், குடியேற்றவாதம் உருவாக்கிய சமூக வர்க்கங்கள், ஐரேப்பிய சிந்தனைகளிலிருந்து எவ்வளவுக்கு எடுத்துக் கொண்டார்களோ, அதே அளவு தமது கடந்தகால பாரம்பரியங்களிலிருந்தும் பெற்றுக் கொண்டனர்.


நவீன சிங்கள உணர்வு உருவாகிய இந்தக் கால கட்டத்திலேயேதான், ஐரோப்பாவில் இனரீதியான சித்தாந்தங்கள் பிரபல்யமடைந்தன.”

(தொடரும்)

# சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவமும்




கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு




**திருகோணமலை மாவட்டத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகள்**

கட்டுக்குளம் பற்று, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரிவின் ஒரு பகுதி மற்றும் திருகோணமலை நகர சபை ஆகியவற்றை உள்ளடக்கிய திருகோணமலைத் தொகுதி, தம்பலகாமம்பற்று, கொட்டியார்பற்று ஆகியவற்றை உள்ளடக்கிய மூதூர்த் தொகுதி என்பனவாகும்.


**திருகோணமலை மாவட்டத் தேர்தல் தொகுதிகள் -எல்லை நிர்ணயம்-1947**



53-திருகோணமலை:-54-மூதூர்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லை நிர்ணயம்செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகள்**

ஏறாவூர்பற்று மற்றும் கோறளைப்பற்றை உள்ளடக்கிய கற்குடாத் தொகுதி, மண்முனைப் பற்று வடக்கின் ஒருபகுதி, மட்டக்களப்பு நகர சபை, பிந்தென்ன பற்று ஆகியவற்றை உள்ளடக்கிய மட்டக்களப்புத் தொகுதி, வெவ்கம்பற்றின் ஒரு பகுதி (உடபளாத்த கோறளை), எருவில்-போரதீவுப்பற்று, மண்முனைப்பற்று தெற்கு, நிந்தவூர் பற்றின் ஒரு பகுதி, கரைவாகுபற்றின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பட்டிருப்புத் தொகுதி, சம்மாந்துறைப் பற்று, வெவ்கம்பற்றின் ஒரு பகுதி (மதபளாத்த கோறளை), நிந்தவூர் பற்றின் ஒரு பகுதி, கரைவாகு பற்றின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய கல்முனைத் தொகுதி, அக்கரைப்பற்று, பானமபற்று, வெவ்கம்பற்றின் ஒரு பகுதி (யட்டிப்பளாத்த கோறளை), நிந்தவூர் பற்றின் ஒரு பகுதி, கரைவாகு பற்றின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பொத்துவில் தொகுதி என்பனவாகும்.




எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் விதப்புரைகள் 1946ஆம் ஆண்டின் SP-XIII ஆம்இலக்க அமர்வறிக்கையாக பிரசுரிக்கப்பட்டதோடு 1946ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி தேர்தல் மாவட்டங்கள் வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டன.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் சொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

➢1931ஆம் ஆண்டின் சனத்தொகை அடிப்படையில் 70 தேர்தல் தொகுதிகளும் மாகாண மட்டத்தில் பிரிக்கப்பட்டிருந்தாலும் மாகாணத்திற்குள் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்யப்படும் போது 1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீடே பாவிக்கப்பட்டது.

➢1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இனரீதியில் பார்த்தால் 95 தேர்தல் தொகுதிகளும் சிங்களவர்- 66, இலங்கைத் தமிழர்- 12, இந்தியர் (முஸ்லிம்தவிர)-10, முஸ்லிம்-6, ஏனைய இனத்தவர்-1 என பிரிக்கப்படல் வேண்டும். ஆனால் மாகாண மட்டத்தில் ஒதுக்கப்படவேண்டிய தேர்தல் தொகுதிகள் 1946ஆம் ஆண்டின் சனத்தொகை ரீதியில் பார்க்கும் போது 95 தேர்தல் தொகுதிகளும் அட்டவணை-2இல் காட்டியது போன்று பிரிக்கப்படல் வேண்டும்.

(குறிப்பு: 1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி 732,000 இந்தியர்கள் (666,000 இந்தியத் தமிழர்கள், 37,000 இந்திய முஸ்லிம்கள், 29,000 ஏனைய இந்தியச் சமூகத்தவர்கள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது.)

மாகாண மட்டத்தில் அட்டவணை-2

| மாகாணம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லிம் தவிர) | முஸ்லிம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 16 | 1 | 1 | 1 | 1 | 20 |
| மத்திய | 8 | 1 | 4 | 1 | 1 | 15 |
| தென் | 11 | - | - | - | 1 | 12 |
| வட | - | 8 | - | - | 1 | 9 |
| கீழ் | - | 3 | - | 3 | 1 | 7 |
| வடமேல் | 9 | - | - | 1 | - | 10 |
| வட மத்திய | 4 | - | - | - | 1 | 5 |
| ஊவா | 5 | - | 2 | - | - | 7 |
| சப்ரகமுவ | 8 | - | 1 | - | 1 | 10 |
| மொத்தம் | 61 | 13 | 8 | 6 | 7 | 95 |

சிறுபான்மை இனத்தவர்களின் பிரதிநிதித்துவம் பற்றி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

குழுவின் எல்லை நிர்ணயத்தின்படி, வட மாகாணத்தின் 9 தொகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தில் 4 தொகுதிகளிலுமாக மொத்தம் 13 தொகுதிகளில் இலங்கைத் தமிழர்கள் வெல்லமுடியுமென்றும், மேலும் மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஆதரவுடன் தமிழர் ஒருவர் வெற்றிபெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள்.

அட்டவணை-2இல் காட்டியது போன்று இந்தியத்தமிழர்களுக்கு எட்டுத்தொகுதிகள் கிடைக்க வேண்டும். அதில் ஏழு தொகுதிகள் பின்வருமாறு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. மத்திய மாகாணத்தில் நுவரெலியா தொகுதி (சனத்தொகை வீதம்-சிங்களவர்-26%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத்தமிழர்- 59%, முஸ்லிம்-3%, ஏனையோர்-3%), தலவாக்கலை தொகுதி (சனத்தொகை வீதம்- சிங்களவர்-7%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத்தமிழர்-80%, முஸ்லிம்-2%, ஏனையோர்-2%), கொட்டகலை தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 27%, இலங்கைத் தமிழர்- 15%, இந்தியத் தமிழர்- 54%, முஸ்லிம்-3%, ஏனையோர்-1%), மஸ்கெலியா தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 13%, இந்தியத்தமிழர்- 61%, முஸ்லிம்-1%, ஏனையோர்-2%), நாவலப்பிட்டி தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 14%, இந்தியத்தமிழர்- 51%, முஸ்லிம்-5%, ஏனையோர்-7%) ஆகிய ஐந்து தொகுதிகளும் ஊவா மாகாணத்தில் பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி (சனத்தொகை வீதம்-சிங்களவர்- 44%, இலங்கைத் தமிழர்- 8%, இந்தியத்தமிழர்- 42%, முஸ்லிம்-3%, ஏனையோர்-3%), ஹப்புத்தளைத் தொகுதி (சனத்தொகை வீதம்- சிங்களவர்- 32%, இலங்கைத் தமிழர்- 6%, இந்தியத்தமிழர்- 57%, முஸ்லிம்-2%, ஏனையோர்-3%) ஆகிய இரு தொகுதிகளும் உருவாக்கப்பட்டன. மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்தியத் தமிழர்களின் சதவீதம் (25%) இலங்கைத் தமிழர்களின் சதவீதத்தை (16%) விட கூடுதலாகவிருப்பதால் இந்தியத் தமிழரை போட்டியிடச் செய்வதால் இந்தியத் தமிழர் ஒருவர் வெற்றிபெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள். (குறிப்பு- அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய கொழும்பிலிருந்து தமிழர்கள் ஒருபோதும் தெரிவு செய்யப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் இடதுசாரி அரசியல்வாதியான பீட்டர் கெனமனுக்கு தமிழர்களின் ஆதரவு இருந்ததும் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை முதலாவது தேர்தலின் பின் இரத்துச் செய்யப்பட்டதுமாகும்)

அட்டவணை-2இல் காட்டியது போன்று முஸ்லிம் சமூகத்திற்கு ஆறு தொகுதிகள் கிடைக்க வேண்டும். முஸ்லிம் சமூகம் மாகாணங்களில் சிதறி வாழ்ந்ததால் அவர்களுக்கு ஆறு தொகுதிகள் ஒதுக்க முடியவில்லை என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.


அவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்று தொகுதிகளும் (மூதூர், கல்முனை மற்றும் பொத்துவில்) மேல்மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து முஸ்லிம் ஒருவர் வெற்றிபெறக் கூடியதாக நான்காவது தொகுதியும் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பலாங்கொடை-பலப்பிட்டிய, பலாங்கொடை மற்றும் கடுகண்ணாவை ஆகிய இரட்டை அங்கத்தவர்கள் தொகுதிகள் சாதி, போக்குவரத்து வசதி போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி மக்களின் வேண்டுதலுக்கமைய உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தியர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் குடியுரிமை பெற தம்மை பதிவுசெய்து கொள்ளாத காரணத்தினால் இலங்கையின் சனத்தொகைக்கும் இலங்கையின் குடியுரிமை உள்ளவர்களின் சனத்தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. 1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகை 6,636,617 ஆகவும் குடியுரிமை உள்ளவர்களின் சனத்தொகை 6,484,409 ஆகவும் காணப்பட்டது.

(தொடரும்...)

# மடு திருவிழா திருப்பலியில் பங்கேற்றார் பிரதமர் ரணில்





(பனிக்கன்குளம்)

மன்னார் மடு திருத்தலத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வருகை தந்து திருவிழா திருப்பலியில் பங்கேற்று இருந்தார்.

மன்னார் மடு திருத்தலத்தில் மடு அன்னையின் விண்ணேற்புத் திருவிழா வருடா வருடம் ஆவணி மாதம் நடைபெற்று வரும் நிலையில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர் வருகைதந்திருந்தனர்.

இந்நிலையிலேயே மடு அன்னையின் உற்சவத்தின் இறுதி நாளான நேற்று திருவிழா திருப்பலியில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அழைப்பின் பேரில் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவிற்காக கிறிஸ்தவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி உதவியினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மன்னார் ஆயரிடம் கையளித்தார்.

இதேவேளை மடு திருத்தலத்தின் புதிய பரிபாலகராக அருட்தந்தை பொப்பி சோசை அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவல் பெனான்டோ ஆண்டகை மக்கள் மத்தியில் அறிவிப்பை வழங்கினார். (2-281)

# வவுனியாவில் தாயும் மகனும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



(குருமன்காடு)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் கிணறு ஒன்றில் இருந்து இளம் தாயும் 4 வயது மகனும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் குறித்த இரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வசிக்கும் தாயான மயூரன் ராஜீனி (வயது-33) மற்றும் அவரது மகன் மயூரன் சச்சின் (வயது-4) ஆகியோர் அவர்களது வீட்டின் முன்பாகவுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இது குறித்து முன் வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில்,

எமது வீட்டிற்குக் குறித்த நான்கு வயது சிறுவன் வந்திருந்தான். அதன் பின் குறித்த தாயும் வந்திருந்தார். இருவரும் நன்றாக வழமை போல் கதைத்தனர்.

இதன்போது வீட்டில் இருந்த றொட்டியை சாப்பிடக் கொடுத்தேன். அவர்கள் சாப்பிட்டார்கள். அவர்கள் வீட்டில் நிற்கும் போது நான் அயலிலிருந்த கடைக்குச் சென்று விட்டேன். 10 நிமிடத்தில் திரும்பி வந்து பார்த்த வேளை அவர்களைக் காண வில்லை.

சிறிது நேரத்தில் அவர்களது மற்றைய பிள்ளையான 9 வயது சிறுவன் அம்மா நிற்கிறாவா எனத் தேடி வந்தான். இதன்போது அவனுடன் இணைந்து தேடிய போதே குறித்த தாயும் மகனும் கிணற்றில் சடலமாக இருந்ததை கண்டோம் எனத்தெரிவித் தார்.

சம்பவ இடத்திற்கு வந்த கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் ஆகியோர் மர ணத்திற்கான காரணம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(2-250-15)



மன்னார் மடுத்திருத்தல ஆவணி மாத வருடாந்த திருவிழா திருப்பலி நேற்றுக் காலை 6.30 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட போது...(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# முதிரை மரக்குற்றிகள், பாலை மரத்தீராந்திகளுடன் இரு வாகனங்கள் கைப்பற்று; மூவர் கைதாகினர்

## இன்று நீதிமன்றில் ஆஜர்



(மல்லாவி )

அக்கராயன்குளம்பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அக்கராயன் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் வெட்டப்பட்ட சுமார் 06, இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள், பாலை மரத் தீராந்திகள் ஆகியவற்றை இரண்டுமகேந்திர பிக்கப் வாகனத்திலும் மற்றும் உழவு இயந்திரத்திலும் யாழ்ப்பாணத்திற்கு கடத்திச் சென்ற போது பொலிஸார் திடீரென சுற்றி வளைத்து, கடத்தப்பட்ட மரக் குற்றிகளையும் கடத்தலுக்கு பயன படுத்தப்பட்ட வாகனங்களையும் கைப் பற்றி யுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு பேர் தப்பி ஓடிய நிலையில் 3 பேரைக் கைது செய்துள்ளதாக அக்கராயன் குள பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை 3.30 மணியளவில் நடை பெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அக்கராயன்குளம்பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து, நிலையப் பொறுப்பதிகாரியின் வழி காட்டுதலுடன் உப பொலிஸ் பரிசோதகர் டீ. டீ. பத்மகாந்த, பொலிஸ் கொஸ்தாபல் ஜனக (75704 ) ஆகியோர் திருமுறிகண்டி ஜெயபுரம் வீதியில் திடீர் வீதிப் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது இரண்டு மகேந்திர பிக்கப் வாகனங்களையும் ஒரு உழவு இயந்திரத்தையும் கடத்திச் செல்லப்பட்ட மரங்களுடன் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில்மூன்று பேரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் அக்கராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை இன்று வியாழக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக அக்கராயன்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்




(முல்லைத்தீவு)

தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 'புலரும் பூபாளர் 2018 ஜேர்மனி' என்னும் திட்டத்தின் கீழ் ஜேர்மனியில் வாழும் புலம்பெயர் தமிழ் இளையோரால் திரட்டப்பட்ட நிதியிலிருந்து தாயகத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்கள் 80 பேருக்கான துவிச்சக்கர வண்டிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

வன்னி வலம்

மேற்படி துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் முள்ளிவாய்க்கால், கௌதாரி முனை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வைத்து வழங்கப் பட்டுள்ளன. (2-9)

# வடக்கு மாகாணத்திற்கான பெண்ணியல் மகப்பேற்று வைத்தியசாலை கிளிநொச்சியில் அமைக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் வடக்கு மாகாணத்திற்கான பெண்ணியல் மகப்பேற்று வைத்தியசாலை நெதர்லாந்து அரசின் நிதியொதுக்கீட்டின் கீழ 196 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்திற்கான பெண்ணியல் மகப்பேற்று வைத்தியசாலையை கிளிநொச்சியில் அமைப்பதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டு அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பொது வைத்தியசாலை வளாகத்தில் இந்த மகப்பேற்று வைத்திய சாலையை அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான இடம் ஒதுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு நெதர்லாந்து அரசின் நிதியொதுக்கீட்டின் 196 கோடி ரூபா செலவில் நவீன வசதிகளைக கொண்ட வைத்தியசாலையாக குறித்த வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளதுடன், இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# நாயாற்று பிரச்சினையை ஆராய்வதற்கு முல்லைத்தீவிற்கு வருகின்றார் ஜனாதிபதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்று பகுதிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 22 ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனை கூறியுள்ளார். முல்லைத்தீவு, நாயாறு பகுதியிலுள்ள தமிழ் மீனவர்களுக்கு சொந்தமான உடைமைகள் அண்மையில் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் நேற்று கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இது தொடர்பில் கேள்வி யெழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்து பேசியுள்ள ஜனாதிபதி,

"எதிர்வரும் 22ஆம் திகதி முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும், அங்கு இரு தரப்பினருடனும் பேசி, இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும்" தெரிவித்துள்ளார்.(2-281)

# கண்காணிப்பு எம்.பிக்களுக்கு மேலதிக கொடுப்பனவு இல்லை

## அகிலவிராஜ் அறிவிப்பு



(கொழும்பு)

கண்காணிப்பு எம்.பிக்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது. பாராளுமன்றத்தில் இடம்பெறும் வாதப் பிரதிவாதங்களைத் திரிபுபடுத்தி மக்கள் மத்தியில் அரசியல் பிரசாரம் செய்வதே கூட்டு எதிரணியின் அரசியல் வகிபாகமாக காணப்படுகிறது என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கண்காணிப்பு எம்.பிக்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படுமாயின் மக்களை வீதிக்கிறக்கி போராடுவதாக கூட்டு எதிரணியினர் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்கள் அனைவரும் திருப்திப்படும் வகையில் சம்பள அதிகரிப்பினை வழங்குவதற்கு தற்போது அரசாங்கம் முறையான வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. நீதிபதிகளின் வேதன அதிகரிப்பு தொடர்பில் கடந்த அமைச்சரவை கூட்டத்தில் இடம் பெற்ற ஒரு கருத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றவிடயம் 2006 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வேதன உயர்வு சட்டத்தின் பிரகாரம் முன் வைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் அரசாங்கம் புதிய திட்டங்கள் முன்வைக்கும் போது பொது எதிரணியினர் அங்கு ஏதும் பேசாமல் வெளியில் வந்து ஒரு விடயத்தினை திரிபுபடுத்தி மக்களை அரசியல் ரீதியில் திசைதிருப்பி விடுகின்றனர்.

கண்காணிப்பு அமைச்சர்களுக்கு மேலதிகமாக எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் எவ்விதமான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கைக்கு பாகிஸ்தான் ஆதரவு

## பாக். பதில் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சியை தாம் தொடர்ந்தும் ஆதரிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகராலயமும் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகமும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை கொண்டாடின.

அந்தவகையில் கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தானின் பதில் தூதுவர் ஜன்பஸ் கான் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் - இலங்கை உறவு குறித்து மேலும் தெரிவித்த அவர்.

"இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சிறந்த இராஜதந்திர உறவு காணப்படுகிறது.

பரஸ்பர புரிதல் மற்றும் பொதுவான நலன்களை அடிப்படையாகக் கொண்ட இந்த உறவில் தொடர்ந்தும் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது.

அந்தவகையில், தேசிய பாதுகாப்பு, ஜனநாயகத்தை ஏற்படுத்தல், சட்டம் நீதியை நிலைநாட்டல் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவளிக்கும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# தேர்முட்டி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர்முட்டி திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

விசேட பூஜைகள் இடம்பெற்று, தேர்முட்டிக்கான கலசம் வைக்கப்படும். இந் நிகழ்வில் அனைத்து முருகன் அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலயபரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 90 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 85 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 150 | 240 | 200 |
| தக்காளி | 80 | 80 | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 140 | 140 | 80 | 160 | 200 |
| கரட் | 200 | 400 | 220 | 400 | 400 |
| பூசணி | 60 | 70 | 50 | 100 | 100 |
| புடோல் | 60 | 70 | 40 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 180 | 170 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 120 | 120 |
| பயற்றங்காய் | 60 | 50 | 40 | 80 | 50 |
| லீக்ஸ் | 140 | 120 | 80 | 140 | 200 |
| பீற்றூட் | 60 | 120 | 100 | 120 | 200 |
| கறிமிளகாய் | 150 | 200 | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 50 | 120 | 30 |
| போஞ்சி | 200 | 180 | — | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 55 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 35 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 30 | 50 | 50 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 140 | 160 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 80 | 200 | 100 |
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 120 | 60 | 30 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1487

## அனிருத்

வாழ்க்கைல நிம்மதி வேனும்னா இரண்டு பேரைக் கண்டுக்கவே கூடாது



நமக்குப் பிடிக்காதவங்க...
நம்மைப் பிடிக்காதவங்க...

## அப்சர்

உலகில் மிகச் சிறந்த வைரங்கள்



மனிதன் மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களே

## அகிலா

நம்பெயர் வெற்றி இடமாக இருப்பதும் வெற்றிடமாக இருப்பதும் நம் முயற்சியின் கையில் உள்ளது



## ஆதி

பணக்காரன் மேலும் பணம் சேர்க்கப் போராடுவதற்கும்



ஏழை விவசாயி பாடுபட்டு அவன் பசியைத் தீர்த்து வைக்கின்றான்

## ஆரூரன்

அம்மா இல்லாதவர்களுக்கு அக்கா எப்படி இன்னொரு அம்மாவோ



அதுபோல அப்பா இல்லாதவர்களுக்கு அண்ணன்தான் இன்னொரு அப்பா!

## ஆத்மிகா

புத்தகப் பை சுமக்க வேண்டிய வயதில்



வீட்டின் வறுமையைச் சுமக்கின்றனர் ஏழைப் பிள்ளைகள்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

கந்தனைக் காணாத கண் என்ன கண்ணே!
கற்பூர ஒளி காணா கண் என்ன கண்ணே!
~ ஓர் கவிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர்ச் சூழலில் தெய்வீகத்தைப் பேணுவோம்

நல்லூர்க் கந்தப் பெருமானுக்கு இன்று கொடியேற்றம். நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் எங்கும் விழாக் கோலம் பொலியும்.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டில் இருக்கின்ற நம் புலம்பெயர் உறவுகள் நல்லூர் முருகனைக் கண்டு தரிசிக்க தவமிருந்து வருவர்.

இதனால் நல்லூர்ப் பதியில் இலட்சோப இலட்சம் மக்கள் கூடுவர். இஃது நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலச் சிறப்பு. இந்தச் சிறப்பு யாரும் அறிந்தது என்பதால் அதுபற்றி நாம் இங்கு விபரணம் செய்ய வேண்டியதில்லை.

மாறாக ஈழத் தமிழர்களின் அடையாளமாக இருக்கக்கூடிய நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலம் பக்திமயமாக, அன்பின் வியாபகமாக, ஆத்மிக தானமாக அமைவதென்பது எங்கள் கைகளிலேயே உள்ளது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தில் பிற சமயத்தவர்களும் வெளிநாட்டவர்களும் கலந்து கொள்வதால் நல்லூர்க் கந்தனின் ஆலயத்திலும் ஆலயச் சூழலிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எங்கள் நடை உடை பாவனைகளே மற்றவர்களுக்கான எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்.

எனவே நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயச் சூழலைத் தெய்வீகத்தன்மையோடு பேண வேண்டிய பெரும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

நாங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றோமோ அதனையே மற்றவர்களும் பின்பற்றுவார்கள்.

எனவே நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் ஆசாரத்துடன்; சைவ சமயக் கலாசாரத்துடன்; பண்பாட்டு விழுமியங்களுடன் நடந்து கொள்வதை நாம் அனைவரும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பதிக்குச் செல்கின்ற அடியார்கள் அனைவரும் வேட்டி உடுத்திச் செல்ல வேண்டும் என்பது நியதி.

இதை அறியாதவர்கள் யாரேனும் அங்கு சென்றால் விற்பனைக்கு இருக்கக்கூடிய வேட்டியை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும்.

இதேபோன்று கேரளாவில் உள்ள பத்மநாபா கோவிலிலும் ஆண்கள் வேட்டி உடுப்பதும் பெண்கள் சேலை கட்டுவதும் கட்டாயமானதாகும்.

ஆக, எந்த இடத்துக்கு நாம் செல்கின்றோமோ அந்த இடத்தின் கலாசாரத்தைப் பின்பற்றுவது மிகமிக முக்கியமானது.

இதேபோன்று நல்லூர்க் கந்தன் ஆலயத்திலும் ஆண்கள் வேட்டி அணிவதும் பெண்கள் சேலை கட்டுவதும் ஆலயச் சூழலில் பாதணிகளை முற்றாகத் தவிர்ப்பதும் எங்கள் மரபு என்பதை நாம் நிரூபித்தாக வேண்டும்.

எங்கள் நடைமுறைகளை நாம் பின்பற்றும் போது ஏனையவர்கள் நிச்சயம் அதனைப் பின்பற்றுவார்கள் என்பதால், எம் இளைஞர்கள் இதுவிடயத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்வார்கள் என நம்பலாம்.

“தெய்வீகப் பண்புகளைப் பேணிப் பாதுகாப்பது அவசியம்”

# திருக்கோயில் வழிபாடுகளில் புதிய நாகரிகங்களை அறிமுகம் செய்வதில் எவ்வித அர்த்தமுமில்லை

## செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

எங்கள் மரபுகளையும் பாரம்பரிய பண்பாடுகளையும் காக்கும் திருக்கோயில்களுக்கு செல்பவர்கள் அனைவரும் ஆடை கலாசாரத்தையும் தெய்வீகப் பண்புகளையும் பேணிப் பாதுகாப்பது அவசியம் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்

இவ் விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

வரலாற்றுப் பெருமைவாய்ந்த நல்லைக் கந்தனின் பெருந் திருவிழா இன்று (16-08-2018) ஆரம்பமாகிறது.

இதே வேளை மிகவும் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி முருகன் திருக்கோயில் பெருவிழாவும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பெருவிழாவும் இவ்வாண்டு சமகாலத்தில் நடைபெறுகிறது.

சைவ மக்கள் திருவிழாவுக்காக வருடம் முழுவதும் காத்திருந்து இம்மூன்று திருக்கோயில்களுக்கும் திரண்டு சென்று வழிபாடு செய்வது வழக்கம். இம் மரபினை காத்திட அனைவரும் திருவிழா நாட்களான தெய்வீக காலத்தை புனிதமாகப் பேண வேண்டும்.

ஆலய வழிபாட்டுக்குச் செல்லும்போது எங்கள் பாரம்பரியமான சைவத் தமிழ் பண்பாட்டு உடைகளுடன் செல்வது மிகவும் முக்கியமானது.

திருக்கோயில் வழிபாடுகளில் புதிய நாகரிகங்களை அறிமுகம் செய்வதில் எதுவித அர்த்தமும் இல்லை. எங்கள் மரபுகளையும் பாரம்பரிய பண்பாடுகளையும் காக்கும் நிலையங்களாக திருக்கோயில்கள் விளங்குகின்றன.

எனவே, அனைவரும் ஆடை கலாசாரத்தையும் தெய்வீகப் பண்புகளையும் பேணிப் பாதுகாப்பது அவசியம். ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்கள் அளவுக்கதிகமான ஆபரணங்களை அணிந்து சென்று திருடர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் எளிமையாகச் செல்வதே சாலப்பொருத்தமானது.

பெண்கள் எங்கள் சமயத்தை நெறிமுறை தவறாது காக்கும் வகையில், திருக்கோயில் வழிபாட்டுக்கு செல்லும்போது தலைவிரி கோலத்தை தவிர்த்துக் கொள்ளவேண்டும். தலைவிரிகோலம் என்பது மங்கலத்திற்கு எதிரானது என எமது இலக்கியங்கள் சான்று பகருகின்றன.

கண்ணகி, பாஞ்சாலி போன்றவர்கள் தலைவிரித்த இடங்களில் மங்கலத்துக்கு எதிரான சம்பவங்கள் நிகழ்ந்திருப்பது வரலாறு.

எனவே தெய்வ வழிபாட்டுக்குச் செல்லும்போது தலைவிரி கோலத்தை தவிர்த்து விடும்படி சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் முன்பு பலதடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவற்றை மறந்து விடாதீர்கள். எப்படியும் போகலாம் என்ற எண்ணத்தை விடுத்து, தெய்வ வழிபாட்டுக்குச் செல்லும்போது அதற்குரிய பாரம்பரியங்களை நாம் பேணியே ஆகவேண்டும்.

ஆண்கள் நீளக்காற்சட்டை, சேர்ட் போன்ற உடைகளோடு திருவிழா காலத்தில் திருக்கோயில் செல்வது பொருத்தமாகாது. எங்கள் சமயத்தின் உன்னத மகத்துவத்தை நாங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.

அமைதியான வழிபாடும் ஒன்றுபட்ட பிரார்த்தனையும் இன்று அவசியம். நமது சமூகம் நிம்மதியைத் தொலைத்து விட்டு, அச்சத்தோடு நாட்களைக் கடக்கிறது.

ஊடகங்களில் வரும் செயதிகள் கவலை தருகின்றன. எம்தலைமுறையை சீராக வழிநடத்த ஆத்மீகப் பலமே இன்று நமக்கு வேண்டும். வாய் வலிமை, தோள்வலிமை எல்லாமே அர்த்தமற்றது. அருள் வலிமை ஒன்றினாலேயே நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கலாம்.

அருள் வலிமையை பெருக்குவதற்கு ஆண்டவன் சந்நிதானமே எமக்கு தஞ்சம். எனவே, எமது சந்ததியை தெய்வ நம்பிக்கையுடையவர்களாக வளர்ப்பதற்கு திருவிழா காலங்களை நாம் நன்கு பயன்படுத்த வேண்டும். எனவே வேறு வேலைகளை ஒதுக்கிவிட்டு, திருவிழாக்கால நினைப்போடு நாம் திருந்தி வாழ வழிதேடுவோம்.

ஆத்மாவுக்கு ஆறுதல் தேடும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். திருவிழாவுக்கு செல்வதற்கு ஆயத்தமாவோம். எங்கும் அமைதியும் ஆனந்தமும் உருவாகுவதுடன அனைவருக்காகவும பிரார்த்திப்போம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

## பூர்வீக காணிகளை மீட்டுத்தரக் கோரி பொத்துவிலில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(பொத்துவில்)

தமது பூர்வீக காணிகளை மீட்டுத் தருமாறு கோரி, பொத்துவில் - கோமாரி 60 ஆம கட்டை பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை முதல் முன்னெடுக்கப்பட்டது.

யுத்த காலத்தில் அச்சம் காரணமாக தமது பூர்வீக நிலங்களை விட்டு வெளியேறிய மக்கள் பல்வேறு பகுதிகளில் தங்கி வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில், தமது பூர்வீக காணிகளை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். தமது கோரிக்கை தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகளால் குறித்த காணி மீட்டுத்தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஸ்ரீ 108 வைணவத் திருத்தலங்கள்**

திருக்கடித்தானம்
திருச்சிற்றாறு
திருப்புலியூர்
திருவாறன் விளைபந்தனம்
திருவண்வண்டூர்
திருவனந்தபுரம்
திருவட்டாறு
திருப்பதிசாரம்
திருக்குறுங்குடி
நாங்குனேரி
ஸ்ரீவைகுண்டம்
நத்தம்
திருப்புளியங்குடி
தொலைவிலிமங்கலம்
பெருங்குளம்
திருக்கோளூர்
தென்திருப்பேரை
ஆழ்வார் திருநகரி
ஸ்ரீவில்லிபுத்தூர்
திருத்தங்கல்

(தொடரும்)

## தந்தைக்கு கடன்; மகளுக்கு தாக்குதல் வர்த்தகர் மீது பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

தந்தை கொடுக்க வேண்டிய பணத்திற்காக பாடசாலை மாணவியை வர்த்தகர் ஒருவர் தாக்கிய சம்பவம் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குடத்தனை வடக்கு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு அப்பகுதியிலுள்ள ஒருவர் கடனாக பெற்ற பொருளுக்கு பணம் கொடுக்க வேண்டும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை கல்வி நிலையத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய 11 வயது மாணவியை அவ் வர்த்தகர் கடுமையாக தாக்கியதாக கூறப்படுகிறது.

இதில் காயங்களுக்குள்ளான மாணவி பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-60)

## வரலட்சுமி விரதம்

அச்செழு நாகதம்பிரான் மதுரைமீனாட்சிஅம்மன்ஆலயத்தின் வரலட்சுமி விரத உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ம)

## 10கிலோ கஞ்சாவுடன் போதைப்பொருள் வியாபார பெரும் புள்ளிகள் கைது

மஹரகம - பிளியந்தல வீதியில் பங்தார பகுதியில் வைத்து நேற்றுக்காலை காரில் பயணம் செய்தவர்களை தடுத்து விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும்போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் பெரும் புள்ளிகள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வெள்ளவத்தை மற்றும் ஹங்கல்ல பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 36 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைது செய்த வேளையில் அவர்களிடமிருந்து 10 கிலோ 700 கிராம் கஞ்சாவும் சந்தேக நபர்கள் பயணித்த காரொன்றும் பொலிஸாரால். மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளுக்காக போதைத் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ-7)

# வடக்கு-கிழக்கு பிறிமியர்லீக் பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற கடும்போட்டி

வடக்கு. மாகாண வீராரங்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின் போட்டிகளின் பிளே ஓவ் சுற்றுக்கு 3 அணிகள் தகுதி பெறுவதில் கடுமையான போட்டி நிலவுவதால், 11 ஆவது சுற்று லீக் போட்டிகள் மிகவும் சுவாரஸ்யம் மிகுந்ததாக அமையவுள்ளது.

இதுவரையில் நடந்த போட்டிகளின் அடிப்படையில் ரில்கோ கொங்கியூறஸ் அணி முதல் அணியாக பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு. 5 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் அதிகூடிய பரிசில் பொதிகளை உள்ளடக்கிய வகையில் நடைபெறும் இந்த பிறிமியர் லீக்கில், கிளியூர் கிங்ஸ், தமிழ் யுனைட்டட், ரில்கோ கொங்கியூறஸ், மன்னார் எப்.சி, றிங்கோ ரைரன்ஸ், வவுனியா வாரியர்ஸ், நொதேன் எலைட், முல்லை பீனிக்ஸ், வல்லை எப்.சி, மட்டுநகர் சுப்பர் கிங்ஸ், அம்பாறை அவஞ்சேர்ஸ், மாதோட்டம் எப்.சி ஆகிய 12 அணிகள் பங்குபற்றின.

முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடை பெற்றன. இதில் ஒவ்வொரு அணியுடனும், மோதும் வகையில் 11 சுற்றுக்களை உள்ளடக்கிய வகையில், 66 போட்டிகளைக் கொண்ட லீக் போட்டிகள் தற்போது, நடைபெற்று வருகின்றன. இதில் 10 சுற்றுக்கள் முடிவடைந்துள்ளன.

10 சுற்றுக்களின் அடிப்படையில், ரில்கோ கொங்கியூறஸ் அணி, பங்குபற்றிய 10 போட்டிகளில் 9 போட்டிகளில் வெற்றி பெற்று 27 புள்ளிகளுடன் முதலாவது அணியாக பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதன் பின்னர், கிளியூர் கிங்ஸ் அணி 22 புள்ளிகளுடனும், வல்வை எப்.சி, வவுனியா வோரியர்ஸ், மன்னார் எப்.சி ஆகிய அணிகள் தலா 21 புள்ளிகளுடனும் உள்ளன.

இந்த நான்கு அணிகளுக்கும் இடை யிலேயே கடுமையான போட்டி நிலவுகின்றது.

நான்கு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு போட்டியே எஞ்சியுள்ளமையால், பிளே ஓவ் சுற்றுக்குத் தெரிவாகும் 3 அணிகள் தொடர்பில் கடுமையான போட்டி நிலவுகின்றது. (க-26)

# இறுதிநேரத்தில் அபாரம் கிளியூர் கிங்ஸ் அணி வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றி ணைத்து நடத்தப்படும் வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட் டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 57 ஆவது போட்டியில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியும் கிளியூர் கிங்ஸ் அணியும் மோதின.

போட்டி தொடங்கிய முதல் இரண்டு அணிகளுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவியது. போட்டியின் 93 ஆவது நிமிடத்தில் அடித்த கோல் மூலம் கிளியூர் கிங்ஸ் அணியினர். தமது வெற்றியை உறுதி செய்தனர்.

அந்தக் கோலை கிளியூர் கிங்ஸ் அணியின், அலோசியஸ் எட்வின் அடித்தார். (க-26)

# மன்னார் எப்.சி-வல்வை எப்.சி அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில்





வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 58 ஆவது போட்டியில் மன்னார் எப்.சி அணியை எதிர்த்து வல்வை எப்.சி அணி மோதியது.

போட்டியின் 9 ஆவது நிமிடத்தில் மன்னார் எப்.சி அணியின் எம்.என்.எம்.இசாதீன் முதலாவது கோலை அடித்தார். பதிலுக்கு 24 ஆவது நிமிடத்தில் வல்வை எப்.சி அணியின், எம்.பிறேம்குமார் பதில் கோலை அடித்தார். அதன் பிறகு இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யாழ். கிரிக்கெட் லீக் யாழ்.ஜொலியன்ஸ் வெற்றி

Jaffna Cricket League 2018



எ.பி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். கிரிக்கெட் லீக் தொடருக்கான போட்டிகளில் 4ஆம் திகதி நடைபெற்ற போட்டி ஒன்றில் யாழ். ஜொனியன்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 65 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனிய ன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் சன்சயன்-19, கபில்ராஜ்-23, லவேந்திரா-65, ஞானமிர்தன்-44 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் சந்தோஸ்-01, வாமணன்-01, துவாரகன்-02, சிந்துஜன்-01, இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 19.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் கல்கோகன்-48, உமாதரன்-19, வாமணன்-11, ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் டினூஸன்-01,லோகதீஸ்வர்-02, பிருந்தாபன்-02, லவேந்திரா-03, அபினாஸ்-02 இலக்குகளை கைப்பற்றினர். (கு)

# பூட்டான் சென்று திரும்பிய வீராங்கனைகளுக்கு யாழ்.நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது



இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டு பூட்டானில் இடம்பெற்ற சர்வதேச கால்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி தாயகம் திரும்பிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகளுக்கு யாழ்.நகரில் நேற்று முன்தினம் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் கால்பந்தாட்டப் போட்டிக்கு இலங்கை தேசிய மகளிர் அணி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் தெரிவு செய்யப்பட்ட 23 பேர் கொண்ட தேசிய அணியில் வடக்கு மாகாணத்தில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு தமிழ் வீராங்கனைகள் இடம்பெற்றனர்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளான பா.செயந்தினி, ஏ.டி.மேரிகொன்சிகா, ர.கிருசாந்தினி மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவிகளான எஸ்.தவப்பிரியா, யு.ஜோகிதா, ஜெ.ஜெதுன்சிகா ஆகியோர் மேற்படி அணியில் இடம் பெற்றனர்.

கடந்த வாரம் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம் பெற்ற போட்டிகளில் இந்திய மற்றும் பூட்டான் அணிகளுடன் இவர்கள் விளையாடினர்.

போட்டிகள் முடிவடைந்து தாயகம் திரும்பிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகளில் ஒருவர் கொழும்பில் தங்கிநின்ற நிலையில் சாந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்த பா.செயந்தினி, மாதகலைச் சேர்ந்த ஏ.டி.மேரி கொன்சிகா ஆகியோர் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தனர். இவர்களுக்கு சாந்தையில் உள்ள சமூகமட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ். நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் பாண்ட் இசையுடன் அவர் களின் சொந்த ஊர்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிரதேச மக்கள் மலர் மாலை அணிவித்து அவர்களை வரவேற்றனர். (க-9)

## யாழிலிருந்து நேரடியாக...

துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுதந்திரத்துக்கு முற்பட்ட வரலாற்று காலத்தில் இருந்து இன்று வரை இலங்கை இந்திய உறவானது பிரிக்க முடியாது பின்னிப்பிணைந்து காணப்பட்டுள்ளது.

இந்திய துணை தூதரகம் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்ததில் இருந்து தனது சேவைகளை வடக்கு மக்களுக்கு வழங்கி வருகிறது.

அண்மையில் பல மில்லியன் செலவில் வைத்தியத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, சமூக சேவை என்பவற்றில் பல்வேறு அபிவிருத்திகள் நடைபெற்று வருகிறது. மேலும் குறிப்பாக சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாக மாணவர்களுக்கு யோகா கலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அபிவிருத்தி திட்ட வரிசையில் 160 கோடி ரூபாய் செலவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் மத்திய கலாசார நிலையத்தின் கட்டுமான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கென 150 மீன்பிடி படகுகளும் 300 மீன்பிடி வலைகளும் 100 மில்லியன் ரூபா செலவில் வழங்கப்படவுள்ளன.

நான் துணைத்தூதுவராக பதவி ஏற்ற பின்னர் மக்கள் தூதரக சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக என்னை முன் அனுமதி இன்றி சந்திப்பதற்காக தூதரகத்தில் புதன் கிழமைகளில் மக்கள் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த நாளில் மக்கள் நேரடியாக என்னை சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட முடியும் மேலும் மக்கள் தமது குறைநிறைகளை எமது அலுவலகத்தில் தூதரக அலுவலகத்தில் உள்ள பரிந்துரை பெட்டிகளில் போடமுடியும் அவை நேரடியாக என்னால் பரிசீலிக்கப்படும்.

வடக்கை பொறுத்த வரையில் தமிழ் மொழி முதன்மையாக உள்ளது. எனவே தூதரக தொடர்பாடல் மொழி தமிழாக உள்ளது. அலுவலக கடிதம் ஆங்கிலத்தில் அமையவேண்டியது கட்டாயமல்ல. அவசர தேவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் தூதரகத்தால் அனுப்பப்படும் கடிதங்களும் தமிழிலேயே அமைந்திருக்கும். மக்கள் தமிழில் கடிதங்களை எமக்கு எந்தவித தயக்கமும் இன்றி அனுப்ப முடியும்.

எதிர்கால திட்டங்களை பொறுத்தவரையில் யாழ் பல்கலைக்கழக நடனத்துறை, இசைத்துறை, சித்தமருத்துவ பிரிவு, இந்து நாகரிகத்துறை, முகாமைத்துவ பீடம் மற்றும் கணித துறைகளுக்கான பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் எம்மாலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள வடக்கு மாகாண பொருளாதாரத்தின் முன்னேற்றத்துக்கான முக்கிய விடயங்களான காங்கேசன் துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் இவை இரண்டும் இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு அமைவாக மக்களின் தேவையை பூர்த்தி செய்ய விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கான உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விரைவில் யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மூலம் நேரடியாக வெளிநாடுகளுக்கு சென்றுவரவும் கப்பல் மூலம் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. யாழ்.இந்திய துணைத்தூதரகம் தொடர்ந்தும் வடக்கு மாகாண மக்களுக்கு தனது பங்களிப்பினை செய்யும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## யாழ்.வன்முறைகளுடன்...

ரொஷான் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் வன்முறைகளுடன் நேரடியாக தொடர்புபடாதவர்களும் இருப்பதாகவும், பூரண விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்வேலி-செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் வைத்து கடந்த மே 7ஆம் திகதி இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம், தற்போது யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டளவில் வன்முறைகள் குறைவடைந்துள்ளன என்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளை குறைக்கும் நோக்கில் பல சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், சந்தேகத்துக்கு இடமான நடமாட்டங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதற்காக பொதுமக்களுக்கு விசேட தொடர்பிலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக வன்முறைகள் குறித்த தகவல்கள் உடனுக்குடன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் தினங்களில் மானிப்பாய் மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் பொலிஸ் அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் அராலி உள்ளிட்ட பகுதிகளில் குள்ளமனிதர்களின் நடமாட்டம் இருப்பதாக கூறப்படுகின்றமை தொடர்பில் பிரதி பொலிஸ் மா அதிபரிடம் வினவிய போது, அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கூறப்படுகின்ற போதும், இது வரையில் முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் பொலிஸார் தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம)

## இராணுவத்தினரின் ரக்...

பகல் ஏ9 வீதி, 155ஆம் கட்டைப் பகுதிக்கும் இரணைமடுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து ஏ9, வீதி ஊடாக இரணைமடு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த இராணுவ ரக் வண்டி மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த க.குகனேஸ்வரன் வயது-51 என்ற 05 பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தினை அடுத்து சிறிது நேரம் ஏ- 09, வீதிப் போக்குவரத்து தடைப்பட்டிருந்த நிலையில் பெருமளவில் மக்கள் கூடியமையால் பதற்றமான சூழ் நிலையும் காணப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன்நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்ததுடன் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் இராணுவ ரக் வண்டியின் சாரதியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15,281,312)

## நல்லாட்சி அரசு...

நீர்கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்கு மூலம் ஒன்றை பெற்றுக்கொள்ள தன்னை அழைத்திருப்பதாகவும், அழைத்திருப்பதற்கான காரணத்தை தான் சரியாக அறியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை பெற திணைக்களத்திற்கு வருமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இதேவேளை, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிர்க்கட்சி பெற்றுக்கொள்வது தொடர்பில் நீர்கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ,

கூட்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமான அணியாக செயற்பட்டாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமது அணிக்கு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம)

## சம்பத் நாட்டை விட்டு...

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அறிவித்தனர்.

ஹெற்றியாராச்சி முதியான்சலாகே சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி என்ற முழுப் பெயரைக் கொண்ட நேவி சம்பத், கொழும்பு லோட்டஸ் வீதியில் போலி அடையாள அட்டையுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

நேவி சம்பத்தை நேற்று வரை தடுத்து வைத்து விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

இந்த நிலையில் சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

நேவி சம்பத் போலியான ஆள் அடையாள அட்டை வைத்திருந்தார். அத்துடன், அவர் போலியான தகவல்களை வழங்கி கடவுச்சீட்டைப் பெற்றுள்ளார். அந்தக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி அவர் 2017ஆம் ஆண்டு மலேசியாவுக்கு சென்று இந்த ஆண்டு மார்ச் மாதம் நாடு திரும்பியுள்ளார்.

மலையகத் தோட்டப்பகுதியில் சந்தேகநபர் காவலாளியாகப் பணிபுரிந்துள்ளார். இலங்கை துறைமுக அதிகார சபையின் இரண்டு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அவர் கொழும்புக்கு வந்துள்ளார்.

நேவி சம்பத் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர், அவருக்கு 5 லட்சம் ரூபா பணத்தை கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் வழங்கியுள்ளார். அந்தப் பணம் கடற்படையின் வங்கிக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

அதனை ஆராய்ந்த நீதிவான் லங்கா ஜயரட்ன, சந்தேகநபரின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் இலங்கை வங்கி, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கவேண்டும்.

சந்தேகநபருக்கு போலியான தேசிய அடையாள அட்டை மற்றும் போலியான தகவல்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டு வழங்கிய அதிகாரிகளைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார்.

அத்துடன், சந்தேகநபரை வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 41 வயதுடைய இவர், கடற்படையில் லெப். கொமாண்டர் தர அதிகாரியாக கடற்படைப் புலனாய்வு அதிகாரியாகப் பணியாற்றியவர்.

2008 மற்றும் 2009ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மற்றும் சுற்றுப் புறங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, நேவி சம்பத் தேடப்பட்டு வந்தார்.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 தமிழ் மாணவர்களில் 6 பேர் சர்வதேசப் பாடசாலையில் கல்வி கற்றதுடன், 5 பேர் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தவர்கள்.

மாணவர்களின் குடும்பங்களிடம் பல இலட்சம் ரூபாய் கப்பம் பெறுவதற்காக 11 பேரும் கடத்தப்பட்டனர். எனினும் அவர்கள் அனைவரும் பின்னர் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடனும் நேவி சம்பத்துக்கு தொடர்பு உண்டு எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ம)

## புலம்பெயர்ந்தவர்களின்...

கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தமது கடப்பாடுகளின் முன்னேற்றத்தை வெளிப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் தமது ஒத்துழைப்பை தொடர்ந்தும் நல்கும்.

இலங்கையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பொலிஸ் மற்றும் இராணுவ மறுசீரமைப்பு என்பன அடங்கலாக சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை ஊக்குவிக்க பிரித்தானிய அரசாங்கம் தற்போது ஆதரவளித்து வருகின்றது.

பிரித்தானியாவின் மோதல் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை நிதியத்தினால் இவற்றுக்கான நிதி உதவி வழங்கப்படுகிறது.

இந்த நிதியத்தின் ஊடாக பிரித்தானியாவின் பங்களிப்பு கடந்த 2016ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 7.9 மில்லியன் யூரோவாக அதிகரித்துள்ளது.

இந்த நிதியானது இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமையளிக்கும் வேலைத்திட்டத்தின் பகுதியாக வழங்கப்படுகின்றது.

அத்துடன், ஜெனிவா பொறுப்புக்கூறல்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதனை ஊக்குவிப்பதில், பிரித்தானியாவிலுள்ள புலம்பெயர் இலங்கையர்கள் தமது வகிபாகத்தை செலுத்த வேண்டும் என கூறியுள்ளார். (ம)

## வள்ளம் கவிழ்ந்ததில்...

மேற்குறித்த நபர் மற்றும் அவருடைய மகன் உட்பட மூன்று பேர் மீன்பிடிப்பதற்காக காக்கைதீவில் இருந்து நாவாந்துறை கடற்பரப்புக்கு வள்ளத்தில் சென்றுள்ளனர்.

அப்போது நாவாந்துறை கடற்பரப்பில் இருந்து மீன்பிடித்துக்கொண்டிருந்த போது கடும் காற்றுடன் கூடிய மழை பெய்ததுடன் கடல் கொந்தழிப்பு ஏற்பட்டது. இதனால் இவர்கள் பயணித்த வள்ளம் கடலில் கவிழ்ந்துள்ளது.

மேற்குறித்த நபருக்கும் அவருடைய மகனுக்கும் நீச்சல் தெரியாத காரணத்தினால் கடலில் வீழ்ந்து தத்தளித்துள்ளார்கள். அப்போது குறித்த நபரை அலை இழுத்து சென்றுள்ளது. மற்றைய இருவரும் வள்ளத்தை பிடித்த படி கரைக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

அலையில் அடித்து செல்லப்பட்ட நபருடைய சடலம் நேற்று அதிகாலை காக்கைதீவு கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)


### மெகா பவர்

திகதி 15/08/2018
சீட்டிழுப்பு இலக்கம் 266
வெற்றி எழுத்து: V
சுப்பர் இலக்க: 13
வெற்றி இலக்கங்கள்: 11 17 40 58
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2018-08-15
சீட்டிழுப்பு இலக்கம் 36
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 08 15 34 40
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 15-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 865
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 4 3 5 2 7 8
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 1852
ஆங்கில எழுத்து: Y
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 19 31 36 74
தேசிய லொத்தர் சபை

**Physics - A/L 2019**

- ★ ஆரம்பத்திலிருந்து முழுப்பாடத்திட்டமும் உரிய காலத்தில் கற்பித்து முடிக்கப்படும்.
- ★ இரண்டு அலகுகளாக கற்பிக்கப்படும்.
- ★ வினா - விடை வகுப்பும் உள்ளடங்கலாக கற்பிக்கப்படும்.

➤ **ஆரம்பம் : 18.08.2018 சனி காலை 9.00am**

★ பொறியியல்
★ வெப்பவியல்

ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் (BSc, PGDE)
T.P: 077 611 6724
இடம்: MASTER'S SCIENCE INSTITUTION (MSI)
மனிக்கூட்டு வீதி, BMC ஒழுங்கை,
Jaffna Town

(5379)



**SpiritMAX Engineering (Pvt) Ltd**
Turning your vision into values

அனைத்து விதமான கட்டட நிர்மான வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்
(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)

- Architectural Design
- Geo Technical Investigations
- Structural Design
- MEP Design
- Drafting
- Interior Design
- Cost Estimation
- Supervision
- Construction & Renovation

No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk

(5378)


## கொழு...

வீட்டின் அறையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்துவரும் 46 வயதுடைய பிரியதர்சினி புஷ்பராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## நல்லூ...

இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா இடம்பெறும். (ம)

## வாழ்...

மாடு இரவு காணாமல் போயிருந்தது.

இதனையடுத்து அப்பகுதியில் தேடிப் பார்த்த போது பற்றைக்கரை ஒன்றில் பசுவின் தலையும், என்பு, குடற்பகுதி என்பன காணப்பட்டன.

இதனையடுத்து நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)


**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK– 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-3472)



10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்
**நியூசிலாந்து நாட்டில்**
கல்வி - தொழில் - நிரந்தர குடியேற்றம்

அனைத்து வகையான கற்கைநெறிகளிலும் டிப்ளோமா, பட்டக்கல்வி பட்ட மேற்படிப்பு

54 வகையான வேலைகளுக்கு
**500க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்**

அனைவருக்கும் நிரந்தர குடியேற்றம்

விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்
18-08-2018 வெள்ளி மதியம் 1.30மணி

கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்

Student Visa - Work Visa - Spouse Visa - Skilled Migration to UK - Australia - New Zealand - Canada - Malaysia

விபரங்களுக்கு 0777 324 004

10வது ஆண்டில் காலடிபதிக்கும் SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

இல. 221 - 1/1,
மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
021 - 222 00 11

(அ-3513)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



IBC தமிழ்

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

**காகித ஆலைக்கான பணிநிலை வேண்டுகை**

யாழ்/ அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள வடக்கின் முதலாவது காகித உற்பத்தி ஆலைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- ★ உற்பத்தி முகாமையாளர் (Production Manager)
- ★ முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)

தகுதியும் அனுபவமும் உடையவர்கள் சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்

**விண்ணப்பமுடிவுத் திகதி: 25.08.2018**

அனுப்ப வேண்டிய முகவரி: ஆளணி முகாமையாளர்
நோபிள் இன்ரர்நஷனல் பேப்பர்ஸ்
லங்கா பிரைவேட் லிமிற்றெட்,
கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி.

(அ-3520)



# உடனடி வேலைவாய்ப்பு



இலங்கையின் முதற்தரம் வாய்ந்த கல்வி நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு பணியாற்ற ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**இணைப்பாளர் (பெண் மாத்திரம்)**

- A/L
- தேர்ச்சியான ஆங்கில அறிவு (எழுதுதல் மற்றும் கதைத்தல்)
- கணனி அறிவு (MS Word and Excel)
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**ஆசிரியர்கள்**

- (Kids Class) பெண்கள் மாத்திரம்
- (பகுதி நேர ஆசிரியர்கள்- சனி மட்டும்)
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- ஆங்கில டிப்ளோமா அல்லது பட்டச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**விரிவுரையாளர்**

- (முழுநேரம்) (ஆண், பெண் இருபாலாரும்)
- ஆங்கில டிப்ளோமா அல்லது பட்டச்சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(அ-3507)

**நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய பெயரைக் குறிப்பிட்டு இவ் மின்னஞ்சல் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.**

British Way English Academy

தொடர்புகளுக்கு: 076 765 9415
jaffnabwea@gmail.com
முடிவுத்திகதி: 20.08.2018
HR. DIVISION



# வேலைவாய்ப்பு



- சர்வதேச நிறுவனத்தில் யாழ் கிளையில் பணிபுரியும் அரிய வாய்ப்பு.
- எல்லையற்ற வருமானம்.
- ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டு பயணங்கள்.
- வாகன, வீட்டு கடன் வசதி.
- மேற்படிப்பிற்கான நிதியை திரட்டும் வசதி.
- ஓய்வூதியம்.

**பதவி வெற்றிடங்கள்**



➤ **நிதி திட்டமிடலாளர்**
- O/L சித்தியடைந்திருந்தல்

➤ **நிதி திட்டமிடல் முகாமையாளர்**
- A/L சித்தியடைந்திருத்தல்
- ஒரு வருட வேலை அனுபவம்

➤ **அலுவலக உதவியாளர்**
- O/L சித்தியடைந்திருத்தல்

(5374)

- நிதி நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஒய்வுபெற்றவர்களும் விண்ணபிக்கலாம்.

வடமராட்சி, தென்மராட்சியிலிருந்து விண்ணப்பிப்பதற்கு
தொ.பே இல.: 076 255 4333
யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகத்திலிருந்து விண்ணப்பிப்பதற்கு
தொ.பே இல.: 076 528 9947


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.